பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 24 சனிக்கிழமை 06.02.2021 கதிர் 93

**இது ரகசியம் அல்ல!**

ஒவ்வொரு நாளும் சேவல் கூவியதும் விடிகிறது. அதைப் பார்த்த சேவலுக்கு இறுமாப்பு வந்ததாம். நாம் கூவினால்தான் சூரியன் வரும், விடியும் என்று அது எண்ணிக் கொண்டதாம்.


இப்போது வெகு எழுச்சியாய் நடைபெறும் பக்கம்02



## வவுனியாவை நேற்றிரவு வந்தடைந்த

# பேரெழுச்சிப் பேரணி இன்று மன்னார் நோக்கிப் பயணம்!

## முல்லைத்தீவிலும் பெருந்திரளாகத் திரண்டனர் தமிழ் உறவுகள்



தமிழ்பேசும் மக்கள் மீதான இலங்கை அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்தும், சர்வதேசத்திடம் நீதி கோரியும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் கவனவீர்ப்புப் பேரணி நேற்றிரவு வவுனியாவை வந்தடைந்தது. இன்று காலை அங்கிருந்து மன்னார் நோக்கிப் பேரணி பயணிக்கவுள்ளது.

மூன்றாம் நாளான நேற்றுக் காலை திருகோணமலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி முல்லைத்தீவுக்குச் சென்று புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஊடாக வவுனியாவை அடைந்தது. 2

## முள்ளிவாய்க்கால் நினைவுத்திடலில் போராட்டக்காரர்கள் மௌன அஞ்சலி



நீதிக்கான மாபெரும் பேரணி முள்ளிவாய்க்கால் நினைவுத்திடலை நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் வந்தடைந்தது.

அங்கு இறுதிப் போரில் 11

## போராட்டத்துக்குத் தடை கோரும் மனுக்கள் மன்றுகளால் தள்ளுபடி

### மல்லாகம், சாவகச்சேரியில் சட்டத்தரணிகளின் அதிரடி வாதங்களால் கிடைத்தது பெரு வெற்றி

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

அரசின் அராஜகங்களுக்கு எதிராகவும், சர்வதேசத்திடம் நீதி கோரியும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான அஹிம்சை வழிப் போராட்டப் பேரணி நடைபெற்றுவரும் நிலையில் சாவகச்சேரி மற்றும் மல்லாகம் நீதிமன்றங்கள் பொலிஸாரின் தடை உத்தரவு விண்ணப்பங்களை நேற்று தள்ளுபடி செய்துள்ளன.

இதன்படி, சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் 2

## கொரோனாச் சாவு 343 ஆக அதிகரிப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் நால்வர் சாவடைந்துள்ளனர்.

கொழும்பு 15, மட்டக்குளியைச் சேர்ந்த 63 வயதான பெண் ஒருவர் ஹோமாகம 11

## பருத்தித்துறை நீதிமன்றம் பேரணிக்கு தடை உத்தரவு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முதல் நான்கு நாள்களுக்கு ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளைத் நடத்தப் பொலிஸார் தடை உத்தரவு பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை 11

## தடை உத்தரவை நீக்கியது யாழ்ப்பாணம் நீதிமன்றம்!

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்த வழங்கிய தடை உத்தரவை நீதிமன்றம் நீக்கம் செய்தது.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு ஒருமுக விளக்கத்தில் வழங்கிய கட்டளையைப் பிரதிவாதிகள் முன்வைத்த ஆட்சேபனையை அடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நீக்கியது.

பொத்துவில் 2

## மேலும் 729 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் நேற்றும் 729 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 67 ஆயிரத்து 850

## ஆயிரம் ரூபா நாள் சம்பளம் கோரி முற்றாக முடங்கியது மலையகம்!

### ஓரணியில் திரண்டன தொழிற்சங்கங்கள்



ஆயிரம் ரூபா நாளாந்த அடிப்படை சம்பளத்தை வலியுறுத்தி மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அடையாள வேலை நிறுத்தப் 2

**வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்**

புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்

**2021 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான**

வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.

பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை

பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)

பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15

விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்

தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 07.02.2021 , தரம் 3 முதலாவது பரீட்சை 14.02.2021

பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.

"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' அரசியல் பேரணியை ஒட்டி சிவில் சமூக அமைப்புகளின் சார்பில் வேலன் சுவாமியும் வண பிதா எழிலும் வெளியிடும் கருத்துகளைப் பார்த்தபோது சேவலின் நினைப்புத்தான் எனது மனதில் நிழலாடியது.

மேற்படி 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' எழுச்சிப் பேரணி பற்றிய போராட்ட அறிவிப்பு சிவில் சமூக அமைப்புகள் சார்பில் வெளியான கையோடு – அது பற்றிய செய்தி எமது கவனத்துக்கு வந்த அடுத்து கணமே – அந்தப் போராட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு அளவில் ஆதரிக்கின்றது என்ற விவரமான அறிவிப்பும் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியிடமிருந்து எமக்குக் கிட்டியது. அது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தமையுடன் விநோதமாகவும் இருந்தது.

*"போராட்ட அறிவிப்பும், அதை ஆதரிக்கும் அறிவிப்பும் ஒன்றாக வருகின்றனவே...? ஏற்பாட்டாளர்களும் நீங்களே, அதனை வரவேற்பவர்களும் நீங்களே... அப்படித்தானே...?"* – என்றேன் நான். அவர் சிரித்தார். சிறிது விளக்கமாக ஒரு 'குட்டி லெக்சர்' அவர் அடித்தமையும் எனக்கு நன்கு நினைவில் உள்ளது.

*"இப்போது தமிழர்களை ஐக்கியப்படுத்தி, எழுச்சி கொண்டு போராடத் தயார் பண்ண வேண்டிய கட்டாயமுள்ளது. அதுவும் ஜெனிவா அமர்வுக்கு முன் அதனைச் செய்ய வேண்டும். கறுப்பு நாளாக – கரி நாளாக – சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்படும் தினத்தை ஒட்டி அதைச் செய்வதே பொருத்தமானது. தமிழ்த் தேசிய கட்சிகள், தரப்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்தால்தான் அதனை எழுச்சியாக முன்னெடுக்க முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்து முன்னெடுப்பது அந்த ஒற்றுமையைத் தராது. எனவே எல்லா அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் ஒரு பொதுத் தரப்பு எமக்குத் தேவைப்பட்டது. அதனால்தான் சிவில் சமூக அமைப்புகளை முன்நிறுத்தியுள்ளோம். அவர்களின் பங்களிப்பில் எல்லாக் கட்சிகளும் – எல்லாத் தரப்புகளும் – ஒன்றிணைய முடியும். அதனால்தான் சிவில் சமூக அமைப்புகளின் சார்பில் போராட்ட அறிவிப்பும், தொடர்ந்து அதனை வரவேற்கும் கூட்டமைப்பின் அறிவிப்பும் வந்தன."* – என்று விளக்கினார்.

வெறுமனே சிவில் சமூக அமைப்புகள் தனித்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தால் அது இப்படி எழுச்சியாக முன்நகர்ந்திருக்காது என்பது திண்ணம். ஏன், பொத்துவிலில் ஆரம்பத்தில் பொலிஸாரும், படையினரும் நீதிமன்ற உதவியோடு போட்ட முட்டுக்கட்டையில் – நெருக்குவாரத்தில் – ஆரம்பத்திலேயே எழுச்சிப் போராட்டம் படுத்திருக்கும்.

சரியோ, பிழையோ, முதல் நாளில் பல்வேறு நீதிமன்றத் தடைகளையும் மீறி, பொலிஸாரின் தடுப்புக்களையும் உடைத்துக் கொண்டு, பேரணி முன் நகர்ந்தமைக்கு சுமந்திரன், சாணக்கியன் போன் றோரின் – விசேடமாக சாணக்கியனின் – துணிச்சலான தலைமையே காரணம். *"என் மேல் கைபடக்கூடாது. கை தொடாதே"* – என்று வழிமறித்த பொலிஸாரையும் படையினரையும் மேவித் தள்ளி விட்ட படி, அவர்கள் ஒப்படைத்த நீதிமன்ற உத்தரவுக் கடிதத்தை பெற மறுத்து, உடல் மொழியால் அதை தூக்கிக் கடாசி விட்டு, சாணக்கியன் நடந்த நடையையும், தைரியத்துடன் கொட்டும் மழைக்கும் மத்தியில் வீராவேசமாக அவர் முன்னேறியமையையும் சமூக வலைத்தளங்கள் ஊடாகத் திரும்பத் திரும்பப் பார்த்த தமிழர்கள் எழுச்சி கொண்டனர். அதுவரையில் அவர்கள் மனதில் அடங்கிக் கிடந்த உணர்வெழுச்சியை முதல் நாளில் பீறிட்டுக் கிளப்பி வைத்தவர்கள் சாணக்கியனும் சுமந்திரனும். அத்துடன் முதல் நாள் போராட்டத்துக்கு வருவது வரட்டும் என்ற துணைச்சலுடன் சென்ற சுகாஷ், சயந்தன், சுகிர்தன் போன்ற அரசியல் பிரமுகர்களும் இந்த எழுச்சிக்கு வித்திட்டவர்கள். அதே யளவு பங்களிப்புப் பெருமை வேலன் சுவாமி, அருட்தந்தை எழில் போன்ற சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் உண்டு.

அப்படியிருக்கையில் –

ஏதோ சிவில் சமூகப் பிரதிநிதிகளின் போராட்டம் இது என்பது போலவும், அதில் இரண்டு அரசியல்வாதிகள் புகுந்து அரசியல் ஆதாயம் ஈட்டி, பெயர் சுருட்டிக் கொண்டு போகின்றார்கள் என்ற மாதிரியும் வேலன் சுவாமியும், அருட்தந்தை எழிலும் சில ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டமை படுகொச்சைத்தனமான நடவடிக்கை. தான் கூவித்தான் காலை விடிகின்றது என்று கருதும் சேவலுக்கும், தங்கள் போராட்டத்தால்தான் இந்த எழுச்சி வந்த மாதிரி கருதும் வேலன் சுவாமி, அருட்தந்தை எழில் போன்றோருக்கும் வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

நீதிமன்ற தடை உத்தரவுகள், பொலிஸார் மற்றும் படையினரின் கெடுபிடிகள் ஆகியவற்றுக்கு மத்தியில் திட்டமிட்ட படியே பேரணி ஆரம்பித்தமைக்கு சட்ட ரீதியாக சுமந்திரன் தரக் கூடிய காப்பு பற்றிய நம்பிக்கையும், செயல் ரீதியாக சாணக்கியன் காட்டிய துணிச்சலான முன்மாதிரியுமே பிரதான காரணங்கள்.

அதனால் அவர்களுக்குக் கிடைக்கும் அரசியல் ஆதாயத்தை – ஆதரவை – கண்டு வயிறு எரியும் சில அரசியல் தரப்புகளின் கயிறை விழுங்கிக் கொண்டு வேலன் சாமி, அருட்தந்தை எழில் போன்றோரும் வாயில் வந்தவற்றைப் பகிரங்கமாகக் கக்காமல் இருப்பது நல்லது.

எழுச்சிப் பேரணி தொடர்பாக இன்னும் இரண்டு விடயங்கள் உள்ளன.

கோட்டா அரசு எல்லாவற்றையும் பௌத்த, சிங்கள மயப்படுத்தும் நோக்கில் – ஏனைய இனங்களின் தனித்துவத்தை அழிக்கும் இலக்கில் – 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்று அறிவிக்கின்றது.

ஆனால் நாட்டின் நிலைமை அப்படியில்லை. 'ஒரே விடயத்துக்கு பல சட்ட வியாக்கியானங்களும் பல முரண்பாடான தீர்ப்புகளும்' என்பதாகத்தான் நிலைமை உள்ளது.

'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை' எழுச்சிப் பேரணி சம்பந்தமாக மல்லாகம் நீதிவான் நீதிமன்றமும், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றமும் ஒருவித உத்தரவு கொடுக்கின்றன. மாறாகக் கட்டளை பிறப்பித்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் மறு பக்கத்தைச் செவிமடுத்ததும் தன்னைத் திருத்திக் கொண்டு விட்டது. ஆனால் பேரணியின் இறுதி இடமான பொலிகண்டியைத் தனது நீதி நியாயாதிக்க எல்லைக்குள் கொண்டுள்ள பருத்தித்துறை நீதிமன்றம் மட்டும் வேறு விதமாகக் கட்டளை பிறப்பிக்கின்றது. இது எங்ஙனம் சாத்தியம்? 'இது ஒரே நாடு; ஒரே சட்டம்' முறைமையா? எனக்கு விளங்கவில்லை.

அடுத்து விடயம் – பேரெழுச்சியாக நடக்கும் 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' எழுச்சியை முறியடித்துக் குழப்பும் விதத்தில் குறுக்காக மாற்றுப் பேரணி ஒன்றை முன்னெடுக்கும் சதித் திட்டம் குறித்துச் சில மட்டங்களில் பேசப்பட்டதாக ஒரு தகவல் உண்டு. பெரும்பாலும் பெரும் படை முகாம்கள் உள்ள மாங்கும், கிளிநொச்சி அல்லது யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதியில் இந்தத் திருவிளையாடல் அரங்கேறக்கூடும். ஏற்பாட்டாளர்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

– மின்னல் –

## போராட்டத்துக்குத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்தத் தடை உத்தரவு கோரி பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பம் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் சுன்னாகம், காங்கேசன்துறை மற்றும் அச்சுவேலிப் பொலிஸார் முன்வைத்த விண்ணப்பங்களும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கொரோனாத் தடுப்புக்கான சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் பொலிஸ் நிலையங்களினால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் நாட்டுக்குச் சதி ஏற்படுத்தும் வகையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் முயற்சிக்கின்றனர் எனப் பொலிஸார் நீதிமன்றங்களில் எடுத்துரைத்தனர்.

இலங்கை அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள ஒன்றுகூடும் உரிமையைப் பொலிஸாரின் தடை உத்தரவு கோரிக்கை மறுக்கின்றது. அத்துடன், ஒரு இனம் நாட்டுக்குச் சதி செய்வதாக பொலிஸார் எண்ணுவது ஏனைய இனங்களுக்கு வெறுப்புணர்வைத் தூண்டும். கொரோனாத் தொற்று நோய் தொடர்பாகப் பேரணி இடம்பெறும் இடங்கள் தனிமைப்படுத்தப்படவில்லை. இதனால் பொலிஸார் தாக்கல் செய்த அடிப்படையற்ற விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும் என்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த சாவகச்சேரி நீதிவான், பொலிஸாரின் தடை உத்தரவு கோரிக்கையை நிராகரித்து உத்தரவிட்டார்.

இதேபோன்று, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை சுன்னாகம், காங்கேசன்துறை மற்றும் அச்சுவேலிப் பொலிஸார் தாக்கல் செய்த பேரணிக்கான தடை உத்தரவு விண்ணப்பங்கள் நேற்று விசாரணைக்கு வந்தன.

மூத்த சட்டத்தரணிகள் என்.சிறிகாந்தா, வி.திருக்குமரன் மற்றும் சட்டத்தரணிகள் முன்னிலையாகி ஆட்சேபனை தெரிவித்து நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பம், சட்டத்தரணிகளின் ஆட்சேபனையை ஆராய்ந்த மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா, பொலிஸாரின் விண்ணப்பங்களை நிராகரித்து கட்டளை வழங்கினார்.

## பேரெழுச்சிப் பேரணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
முன்னதாக முல்லைத்தீவை நேற்று வந்தடைந்த போராட்டக்காரர்களை வழிமறித்த பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவைக் காட்சிப்படுத்தியபோதிலும் போராட்டக்காரர்கள் அவற்றைப் பொருட்படுத்தாது தொடர்ந்து தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், அவர்கள் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பிள்ளையார் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

அதன்பின்னர் உடுப்புக் குளம் பகுதியில் கூடியிருந்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவான மக்களையும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து அங்கும் ஒரு கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு – சிலாவத்தைச் சந்தியை அண்டிய பகுதிகளும் கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன் அங்கும் பெருமளவான மக்கள் போராட்டத்துடன் இணைந்து தமது ஆதரவை வழங்கியிருந்தனர்.

முல்லைத்தீவு நகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் மாவட்ட செயலகம் வரை இடம்பெற்றது. அங்கிருந்து வாகனங்களில் வட்டுவாகல் பாலம் ஊடாக கோட்டாபய கடற்படைத் தளம் வரையில் பலத்த கோஷங்களுக்கு மத்தியில் பேரணி சென்றது.

அங்கிருந்து முள்ளிவாய்க்கால் நினைவிடத்துக்குச் சென்று அங்கு நினைவுச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு நகர், ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஊடாகப் பயணித்த பேரணியானது நேற்றிரவு 8.30 மணியளவில் வவுனியா நகரைச் சென்றடைந்தது.

இந்தநிலையில், இன்று காலை 7.30 மணிக்கு வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இருந்து பேரணி மீண்டும் ஆரம்பமாகி மன்னார் மாவட்டம் நோக்கிப் பயணிக்கவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்குச் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள் எனப் பெருந்திரளான தமிழ்பேசும் உறவுகள் தமது ஆதரவை வழங்கி வருகின்றனர்.

## மேலும் 729 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் மேலும் 894 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 61 ஆயிரத்து 461பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 46 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரசதகவல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஆயிரம் ரூபா நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

நுவரெலியா, பதுளை, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை, கண்டி, களுத்துறை உள்ளிட்ட மாவட்டங்களில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் இந்தப் போராட்டத்துக்கு நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் வர்த்தகர்கள் தமது கடைகளை மூடி ஆதரவு வழங்கினர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு பெருந்தோட்டக் கம்பனிகள் இன்னும் இணக்கம் தெரிவிக்கவில்லை. தொழில் நிபந்தனைகள் அடிப்படையிலேயே சம்பள உயர்வை வழங்குவதற்கு அந்தக் கம்பனிகள் தயார் நிலையில் இருக்கின்றனர்.

இதனால் சம்பள நிர்ணயசபை ஊடாக சம்பளம் தீர்மானிக்கப்பட வேண்டும் எனத் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தின. இதன்படி எதிர்வரும் 8ஆம் திகதி சம்பள நிர்ணய சபை கூடவுள்ளது.

இந்தநிலையில், கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும், சம்பள நிர்ணய சபை பேச்சு வெற்றியளிக்க வேண்டும் என்பதற்காகவும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்துக்குக் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பிரதான தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அழைப்பு விடுத்திருந்தது.

அதற்கமைய மலையகத்திலுள்ள கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் என்பன ஆதரவு தெரிவித்திருந்ததுடன் நகர வர்த்தகர்களும் கடையடைப்புச் செய்தனர்.

## தடை உத்தரவை நீக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தொடங்கி பொலிகண்டி வரையான அஹிம்சை வழிப் போராட்டம் நடைபெற்று வரும் நிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கு கடந்த புதன்கிழமை தடை உத்தரவு வழங்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, யாழ்ப்பாணம் மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், சட்டத்தரணி க.சுகாஷ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வேலன் சுவாமிகள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் உள்ளிட்டோருக்கு இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டது.

பொதுத் தொல்லையை ஏற்படுத்தல், கொரோனாத் தடுப்புக்கான சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் நாட்டுக்கு கலங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸார் நீதிமன்றில் எடுத்துரைத்திருந்தனர்.

அதனடிப்படையில் பிரதிவாதிகள் முன்னிலையாகாத நிலையில் தடை உத்தரவை நீதிமன்றம் வழங்கியது.

நேற்று இந்தத் தடை உத்தரவு வழக்குகள் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் விசாரணைக்கு வந்தன.

சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், வி.திருக்குமரன் உள்ளிட்டோர் முன்னிலையாகி கடும் ஆட்சேபனையை முன்வைத்தனர்.

அதனால் ஒருமுக கட்டளையாக வழங்கப்பட்ட தடை உத்தரவை நீக்கிய நீதிமன்றம், கொரோனா நோய்த்தொற்று சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டால் அதன் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொலிஸாரை அறிவுறுத்தியது.

# ராஜபக்ஷ அரசின் இன அழிப்பு ஒடுக்குமுறையே தமிழர்களை ஜனநாயகப் போருக்கு தள்ளியது!

## மனோ கணேசன் காட்டத்துடன் தெரிவிப்பு

தமிழ் பேசும் இலங்கையர்களின் தேசிய இருப்பை அழித்தொழிக்கும், ஒடுக்குமுறை ராஜபக்ஷ அரசு, தமிழ் மொழியை பேசுகின்ற இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மதங்களை கடைப்பிடிக்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களை ஜனநாயக போராட்டங்களை நோக்கி தள்ளி விட்டுள்ளது என கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான போராட்டம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நடப்பு ராஜபக்ஷ அரசின் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற கூச்சல் நடைமுறையில், 'ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம்' என்பதில் வந்து நிற்கிறது. இதை நாம் இன்று தெளிவாக புரிந்துகொண்டுள்ளோம். இந்த ஏகபோக கொள்கையை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது. இதை இந்நாட்டு அரசும், உலகமும் புரிந்துகொள்ள வேண்டும்.

உண்மையில் ஒளிவு மறைவு இல்லாமல் இதை இந்த அரசு செய்வதை எண்ணி நாம் மகிழத்தான் வேண்டும். உள்ளொன்று வைத்து புறமொன்று செய்யவில்லையே, இவர்கள்..! இந்நிலையில் அனைத்து ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டி இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக, இந்நாட்டில் எமது இருப்பை உறுதி செய்துகொள்ள நாம் போராட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

நீண்டகாலமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்த தேசிய ஜனநாயக போராட்டம் இப்போது ஆரம்பித்திருப்பதை எண்ணி மகிழ்கிறேன்.

இந்த இலங்கை திருநாடு, 'பன்மொழி, பன்மத, பல்லின' அடிப்படையை கொண்ட பன்மைத்துவ நாடு என்ற இலக்கு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும் வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

இந்நாட்டின் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பங்கும், இன்றைய இலங்கை நாட்டின் ஆட்சியுரிமை, இறைமை ஆகியவற்றில் தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கின்ற மறுக்கப்பட முடியாத உரிமையும் உறுதிப்படுத்தப்படும்வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

தமிழ் பேசும் மக்களையும் உள்ளடக்கியதே இலங்கை



நாடு என்ற அடிப்படை உண்மையை சிங்கள முற்போக்கு சிந்தனையாளர்கள் ஏற்றுக்கொண்டு கண் திறக்கும்வரை இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

இதுவே ராஜபக்ஷ ஆட்சியின் 'ஒரே நாடு, ஒரே சட்டம், ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி' என்ற கொள்கைக்கு உரிய தர்க்க ரீதியான அரசியல் பதிலாகும். இந்த ஜனநாயக போராட்டத்துக்கு எமது ஆதரவை நல்குகிறோம். ஜனநாயக போராட்ட களத்தில் நிச்சயமாக நாம் கரம் கோர்ப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா இன்னமும் கட்டுப்பாட்டை மீறவில்லை தொடர்ந்தும் சுகாதார விதிகளைப் பின்பற்றுங்கள்!

## வைத்தியர் ஹேமந்த ஹேரத் அறிவுரை



கொழும்பு, பெப்.06

நாட்டில் கொரோனா தொற்று இன்னும் கட்டுப்பாட்டை மீறவில்லையென சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். நாட்டில் கொரோனா தொற்று முற்றிலுமாக கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை பின்பற்றப்படுகின்ற அதே சுகாதார வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து பின்பற்றுமாறு சுகாதாரப் பிரிவு பொதுமக்களைக் கேட்டுள்ளது.

கொரோனாத் தொற்று தொடர்பில் பொது மக்கள் சாதாரணமாகச் சிந்தித்துச் செயற்படக் கூடாதென வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வைபங்கள், திருமண விழாக்கள், மரணச்சடங்கு காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் கொரோனாத் தொற்று பரவக் காரணமாக அமைந்தன.

இதனைக் கருத்திற்கொண்டு அத்தியாவசிய தேவையின்றி இது போன்ற வைபவங்களில் கலந்துகொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அத்துடன் அத்தியாவசிய தேவை ஏற்படுமானால் சரியான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி இந்த வைபவங்களுக்கு சென்று உடனடியாகத் திரும்புமாறு பொது மக்களுக்கு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் கொரோனா தடுப்பூசிகளைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் கொரோனா தொற்றார்களின் எண்ணிக்கையைக் குறைக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாளாந்தம் 800 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சுகாதாரப் பிரிவு மற்றும் பொது மக்களின் அனுசரணையில் கொரோனாத் தொற்று தற்போது இந்த நிலைமையில் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தில் நூலகம் திறப்பு!



*கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தில் அமைக்கப்பட்ட நூலகம், வட.மாகாண ஆளுநரால் நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.*

*கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்ட வட.மாகாண ஆளுநர் அதனை திறந்து வைத்தார்.*

*இயற்கை வடிவமைப்பில் அமைக்கப்பட்ட இந்த நூலகம் சுதந்திர தின நாளின் நினைவாக நேற்றுமுன்தினம் காலை திறந்த வைக்கப்பட்டது.*

*அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் ஞாபகார்த்தமாக மரக்கன்றும் நாட்டி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.*

# விசமிகளின் இடையூறுக்கு மத்தியில் தொடர்கிறது தமிழ் எழுச்சிப் பேரணி!





பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணியின் மூன்றாவது நாள் நேற்று (வெள்ளிக்கிழமை) திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் பேரணி பயணிக்கும் வீதிகளில் ஆணிகள் எறியப்பட்டு, பேரணியில் பங்கேற்ற வாகனங்களின் ரயர்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக சிவில் சமூக பிரதிநிதிகள் பயணித்த வாகனம் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன், சிறிதரன் பயணித்த வாகனம், மேலும் சில வாகனங்களின் டயர்களே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புல்மோட்டையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்துகொண்டிருந்தபோதே இத்தகைய சம்பவம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் சில வாகனங்கள் மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது. இதனால் முல்லைத்தீவிலுள்ள இளைஞர்கள், சமூக செயற்பாட்டாளர்களை அந்தப் பகுதிக்கு விரையுமாறு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளனர்.

அத்துடன், இவ்வாறான அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் திட்டமிட்டவாறு பேரணி தொடர்ந்து முன்னெடுக்கப்படுமெனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# கிளிநொச்சியில் இருந்து மோட்டார் சைக்கிள் பேரணி கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் அறிவிப்பு விடுப்பு!



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் இணைவதற்கு கிளிநொச்சியில் இருந்து மோட்டார் சைக்கிள் பேரணி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழில், நேற்றுமுன்தினம் (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணிக்கு அனைத்துத் தரப்பிலும் ஆதரவுகள் கிடைத்து வருகின்ற நிலையில், கிழக்குப் பல்கலைக்கழகமாணவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், மோட்டார் சைக்கிள் பேரணியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், சனசமூக நிலைய அங்கத்தவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் இணைந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வாய்ப்பை இழந்த இலங்கை

**சிங்கள, பௌத்த மக்களின் தலைவன்தான் தாம் என்ற உண்மையைப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்திய இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அந்த அறிவிப்பை வெளியிட்ட சுதந்திர தின நிகழ்வில், தமது செயற்பாடு மூலமும் அதனை நிரூபித்துக் காட்டத் தவறவில்லை.**

**இலங்கை சுதந்திரமடைந்த தினத்தில், 1948 அன்றைய சுதந்திர நாள் நிகழ்வில், நாட்டின் தேசிய கீதம் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலுமே பாடப்பட்டது. அப்படி இரு மொழிகளிலும் அது பாடப்பட்டத்தை உறுதிப்படுத்தும் அந்நிகழ்வின் அழைப்பிதழ் பிரதிகள் இன்றும் இணையத்தில் தாராளமாக உலாவுகின்றன. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சர்ச்சைகளுக்கு உரிய தெளிவுபடுத்தலை நேரடியாகவே – முற்கூட்டியே – முன்வைக்க வேண்டும் என்று எண்ணியோ என்னவோ தேசிய கீதம் சிங்களத்திலும் பின்னர் முடிவில் தமிழிலும் பாடப்படும் என்பதை அதில் தெளிவாகப் பதிந்துள்ளனர்.**

**நல்லாட்சி அரசு ஏற்பட்ட பின்னர் 2016 முதல் அதே முறைமை நடைமுறையில் இருந்து வந்தது. 2019 இல் கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர் தமிழில் தேசிய கீதம் பாடும் முறைமை நிறுத்தப்பட்டது.**

**2016 தொடக்கம் நாட்டின் சுதந்திரத் தினத்தின் பிரதான நிகழ்வில் தமிழிலும் பாடப்பட்டு வந்த தேசிய கீதம், அரச தீர்மானமாக, இம்முறை உத்தியோகபூர்வமாகத் தடுக்கப்பட்டு சிங்களத்தில் மட்டும் பாடப்பட்டிருக்கின்றது.**

**இந்த உத்தரவு மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரண்டு விடயங்களை உணர்த்த எண்ணுகின்றார் போலும்.**

**ஒன்று – தான் பௌத்த, சிங்கள மக்களின் தலைவன மட்டும்தான் என்பதை இந்த நடவடிக்கை மூலம் அவர் உறுதிப்படுத்துகின்றார்.**

**அடுத்தது – இலங்கை நாட்டையும், அதன் தேசிய கீதத்தையும் புரிந்து, ஏற்றித் துதிக்க வேண்டியவர்கள் சிங்களவர்கள் மட்டுமே. அவர்களுக்கு மட்டுமான நாடே இது. அவர்களின் நலனே இங்கு ஓம்பப்படும். ஆகவே அவர்கள் மட்டும் நாட்டை ஏற்றிப் போற்றட்டும். ஏனையோர் நாட்டின் சிறப்பைத் தமது மொழியில் புரிந்து போற்றத் தேவையில்லை. எனவே சிங்களத்தில் மட்டும் தேசிய கீதம் பாடப்பட்டால் போதுமானது என்று கோட்டாபய கருதுகின்றார் போலும்.**

**இலங்கைத் தீவில் கிறிஸ்துவுக்கு முந்திய காலம் தொட்டு ஆழமான வேரோடல்களைக் கொண்ட பூர்வீகக் குடிகளான இலங்கைத் தமிழர்களுக்கு, இங்கு அவர்களின் மொழி இரண்டாம் தரமானது என்று அடித்துரைத்து உணர்வூட்டி, உறுதிப்படுத்தும் விதத்தில் இந்த முடிவு – தேசிய கீதம் தமிழில் பாடப்பட முடியாது என்ற தீர்மானம் – நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றது.**

**ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செலி பச்சலெட் அம்மையார் சமர்ப்பித்த – இலங்கை தொடர்பான – காட்டமான – 17 பக்க அறிக்கையில் இலங்கையில் நீடிப்பது 'பெரும்பான்மை இனத்தவரின் ஏகோபித்த மேலாண்மை ஆட்சி' என்று குறிப்பிட்டிருந்தார். அந்த தர்பாரின் – கொடுங்கோன்மையின் – பிரதிபலிப்பு நடவடிக்கையில் ஒன்றுதான் தமிழில் தேசிய கீதம் பாட விதிக்கப்பட்ட தடையும், அது சிங்களத்தில் மட்டும்தான் பாடமுடியும் என்ற இனவாத உத்தரவும்.**

**இலங்கையின் இனமேலாண்மைவாத அரசுகளின் இத்தகைய அணுகுமுறையே இன நல்லிணக்கத்துக்கு இடைஞ்சலாக இருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளிப்படையாகவே குற்றம் சுமத்துகின்றார்.**

***"முன்னைய வருடங்களில் இரண்டு மொழிகளில் பாடப்பட்ட தேசிய கீதத்தை, சுதந்திர தினம் போன்ற தேசிய நிகழ்வுகளில் தமிழில் பாடமுடியாது என்று இலங்கை அரசு தீர்மானித்திருக்கின்றமை தேசிய நல்லிணக்கத்தில் இரண்டு மொழிகளின் இணைவுக்கு பெரும் இடைஞ்சலாக அமைந்துள்ளது"* என மனித உரிமைகள் ஆணையாளர் நேரடியாகக் குற்றம் சுமத்தினார்.**

**அதனை நேற்று முன்தினம் சுதந்திர தின நிகழ்வில் உறுதியாகக் கடைப்பிடித்து, தெளிவாக நிரூபித்துக் காட்டியிருக்கின்றனர் சிங்கள பௌத்த அரசினரும், அவர்களின் சிங்கள, பௌத்த தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவும்.**

***"இந்த மாதம் தொடங்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46ஆவது அமர்வில் தனக்கு எதிராக எழுந்துள்ள சர்வதேச உணர்வலைகளை – மாற்றுவதற்கு – திருத்துவதற்கு – கிடைத்த அருமையான வாய்ப்பை இலங்கை தூக்கிக் கடாசியுள்ளது. கடந்த ஆண்டு சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதத்தை தமிழில் பாடுவதற்குத் தடை விதித்தமையை ஐ.நா. மனித உரிமையாளர் பெரும் தவறு என்ற சாரப்பட தனது அறிக்கையில் மோசமாக விமர்சித்திருக்கையில் இம்முறை நிலைமையை மாற்றியமைப்பதன் மூலம் சேத நிவிர்த்தி* (Damage Control) *செய்வதற்கு இலங்கைக்கு அற்புதமான வாய்ப்புக் கிடைத்தது. அதையும் இலங்கை பங்கப்படுத்தி நாசப்படுத்தி விட்டது."* – என்று கொழும்பைத் தளமாகக் கொண்ட மேற்குலக ராஜதந்திரி ஒருவர் கூறினார் என பிரபல அரசியல் விமர்சகர் டி.பி.எஸ்.ஜெயராஜ் சுட்டிக் காட்டி யிருக்கின்றார்.**

**யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போடும் போது யார் என்ன செய்ய முடியும்?**

# யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் ஆராய்ச்சி பயிற்சி கட்டடத் தொகுதி திறப்பு!



ஜப்பான் அரசின் நிதியுதவியில் யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தில் அமைக்கப்பட்ட ஆராய்ச்சி பயிற்சி நிலையம் நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

காலை பத்து மணிக்கு ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமா, கல்வி அமைச்சர் ஜி.எல். பீரீஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பல்கலைக்கழக போராசிரியர்கள், பீடாதிபதிகள், பேரவை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், உட்பட பலர் கலந்துகொண்டு உத்தியோக பூர்வமாகக் கட்டத்தைத் திறந்து வைத்தனர்.

# தொல்பொருள் சின்னங்கள் திட்டமிட்ட வகையில் அழிப்பு!

## விசாரணை என்கிறார் விதுர விக்ரமநாயக்க

தேசிய மரபுரிமைகளை அடையாளப்படுத்தும் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இலங்கையின் தேசிய மரபுரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியுள்ளது.

தொல்பொருள் சின்னங்கள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றமை தொடர்பில் உரிய விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என தேசிய மரபுரிமைகள், கலை, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

கல்முதுர பகுதியில் தொல்பொருள் சின்னங்களை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

நாட்டில் அனைத்து பகுதிகளிலும் தேசிய மரபுரிமைகள் காணப்படுகின்றன. மறைக்கப்பட்டுள்ள தேசிய மரபுரிமைகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை முதன்மையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றன. நாடுதழுவிய ரீதியில் அகழ்வாராய்ச்சி பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் பாதுகாப்பு சட்டம் மாத்திரமே தற்போது நடைமுறையில் உள்ளது. இந்தச் சட்டத்தால் மாத்திரம் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்க முடியாது.

ஆகவே, தேசியமரபுரிமை சட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிகிரியா குன்று, தலதா மாளிகை ஆகியவை உலக மரபுரிமையாகக் காணப்படுகிறதே தவிர, தேசிய மரபுரிமையாக அடையாளப்படுத்தப்படவில்லை. இவற்றை தேசிய மரபுரிமையாக அடையாளப்படுத்துவதே அரசாங்கத்தின் பிரதான இலக்கு.

தேசிய மரபுரிமைகளை பாதுகாக்க நாட்டு மக்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இந்த விடயத்தில் அரசியல் காரணிகளை முன்னிலைப்படுத்தப்படா.

தேசிய மரபுரிமைகளையும், நாட்டின் தனித்துவத்தையும் உலகத்துக்கு அடையாளப்படுத்துவோம். கடந்த அரசாங்கம் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த மாதம் தொல்பொருள் ஆராய்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு எதிராகத் தமிழ் அரசியல்வாதிகள் சட்டநடவடிக்கை முன்னெடுக்கவுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து சவால்களையும் வெற்றிக் கொள்ளத் தயாராக உள்ளோம். தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்கும் விடயத்தில் எவ்வின மக்களின் மத மற்றும் இன உரிமைகளும் பாதிக்கப்படவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். - என்றார்.

# நீர்ப்பாசன செழிப்பு தேசிய திட்டம் ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்!

நீர்ப்பாசன செழிப்பு தேசிய திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வு வட மத்திய மாகாணத்தில் உள்ள மகா வெல திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன துறையின் அபிவிருத்தி கிராமப்புற குளங்களை அபிவிருத்தி செய்தல், நாடுமுழுவதிலும் நீர்ப்பாசன கால்வாய்களை மேம்படுத்தல் மற்றும் தேசிய உணவு உற்பத்தியை மேம்படுத்தல் ஊடாக வறுமையை இல்லாதொழித்தல் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நீர்ப்பாசன செழிப்பு தேசிய திட்டம் ஊடாக எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் ஐயாயிரம் கால்வாய்களை புனரமைப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.



# நாடாளுமன்ற ஆசன விடயத்தில் ரஞ்சனுக்கு தற்காலிக நிவாரணம்!

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற ஆசனம் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதைத் தவிர்க்குமாறு மேன் மூறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி பெப்ரவரி 12 ஆம் திகதி வரை இது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டாம் என நாடாளுமன்ற பொதுச் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளது. நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்காக ரஞ்சன் நாமநாயக்கவுக்கு நான்கு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணி தமிழர் தலைநகரிலிருந்து புறப்பாடு!





தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு எதிரான அரசின் அடக்கு முறைகளை எதிர்த்தும் கண்டித்தும் வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகள் ஏற்பாடு செய்த பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி நேற்று (வெள்ளிக்கிழமை) 3 ஆவது நாளாக திருகோணமலை சிவன் கோவிலடியில் இருந்து காலை 8.30 மணிக்கு ஆரம்பமானது.

காலை 8.00 மணிக்கு கோயிலில் விசேட பூசை இடம் பெற்று இந்தப் பேரணி ஆரம்பிக்கப்பட்டது. கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பில் இருந்து இரண்டாவது நாளாக ஆரம்பமான இந்த பேரணி வெருகல், கிண்ணியா ஊடாக இரவு திருகோணமலையை வந்தடைந்தது.

நில ஆக்கிரமிப்பு, திட்டமிட்ட குடியேற்றம், தொல்பொருள் என்ற போர்வையில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் பூர்வீகம் அபகரிப்பு, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் மற்றும் ஜனாஸா எரிப்பு என்பவற்றை கண்டித்தே இந்தக் கண்டனப் பேரணி நடைபெற்று வருகின்றது.

திருகோணமலை பிரதான வீதியின் ஊடாக பேரணி, நடைபவனி நிலாவெளி ஊடாக தென்னமரவாடியை சென்றடைந்து, வடக்கு நோக்கி பயணித்தது.

இந்த மாபெரும் கவனவீர்ப்பு பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன், சி.சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேந்திரன், சி. யோகேஸ்வரன், க.துரைரெட்ணசிங்கம் நகராட்சி, பிரதேசபை உறுப்பினர்கள் மற்றும் சிவில் தலைவர்கள், சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## மேல் மாகாணத்தில் விசேட சோதனை!

### பொலிஸ் தலைமையகம்

வார இறுதி தினத்தை முன்னிட்டு இன்றும், நாளையும் மேல்மாகாணத்தில் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்க இருப்பதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

வார இறுதி தினங்களை முன்னிட்டு மேல் மாகாணத்தில் மீண்டும் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இன்றும் நாளையும் இடம்பெறவிருக்கும் இந்த சோதனை நடவடிக்கைகளின் போது, மேல்மாகாணத்திலிருந்து தூர பிரதேசங்களுக்கு செல்லும் நபர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கான அன்டிஜன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேல்மாகாணத்திலுள்ள பொதுச் சந்தைகள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமான பகுதிகளில் எழுமாறான அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்போது பாடசாலை மாணவர்களை அழைத்துச் செல்லும் பாடசாலை வாகனங்கள் மற்றும் பொது வாகனங்களின் சாரதிகள், வாகன நடத்துநர்கள் மற்றும் சாரதி உதவியாளர்களுக்கும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்காத நிறுவனங்கள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமையுடன், சட்டவிதிகளுக்குப் புறம்பாக செயற்படும் நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும்.

இதன்போது முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை பேணுதல் என்பன கட்டாயம் பின்பற்றப்பட வேண்டிய விடயமாகும்.

இந்நிலையில், நாடளாவிய ரீதியில் முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை தொடர்பில் நேற்று காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 2 ஆயிரத்து 997 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பொலிஸாரால் தேடப்பட்ட வாள்வெட்டுக்குழு சந்தேக நபர் சுதந்திரக் கட்சியின் பேரணியில் வைத்து யாழில் கைது!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் பேரணியில் கலந்துகொண்ட வாள் வெட்டுக்குழுவைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஏற்பாட்டில் யாழில் கடந்தவியாழக்கிழமைபேரணி ஒன்று நடைபெற் றது.

குறித்த பேரணியில், வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பொலிஸாரால் நீண்ட காலமாகத் தேடப்பட்டுவந்த இருவர் கலந்து கொண்டுள்ளார்கள் என யாழ்ப்பாண குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து, பேரணியில் கலந்துகொண்ட இருவரையும் கைது செய்வதற்குப் பொலிஸார் முயற்சித்த வேளை ஒருவர் தப்பி சென்றுள்ளார். மற்றையவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்ட நபரை யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முல்லைத்தீவை வந்தடைந்தது தமிழ் மக்கள் எழுச்சிப் பேரணி!



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி திருகோணமலையில் இருந்து நேற்றுக் காலை ஆரம்பமாகி மாலை முல்லைத்தீவை வந்தடைந்தது.

முல்லைத்தீவில் வைத்து பேரணியில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வீ.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற சி.சிவமோகன், சிவில் சமூக செயற்பாட்டாளர் இளங்கோவன் மற்றும் வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், சட்டத்தரணி சுகாஸ் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆன்மீகத் தலைவர்கள் எனப் பலர் இந்தப் பேரணியில் இணைந்து கொண்டனர்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.சிறிதரன், இரா.சாணக்கியன் உள்ளிட்டோர் தொடர்ந்தும் பேரணியில் இணைந்துள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு எல்லையில் பொலிஸார் நீதிமன்றத் தடையுத்தரவைக் காண்பிக்க முற்பட்டபோதும் அதனை மீறி பேரணி முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோயிலை வந்தடைந்தது.

இதனைத் தொடர்ந்து நீராவியடிப் பிள்ளையார் கோயிலில் தரிசனத்தைத் தொடர்ந்து பேரணி முல்லைத்தீவு நகரை சென்றடைந்தது.

## தொழிலாளரின் பலத்தைக்கண்டு கம்பனிகள் கடும் அச்சம் - ஜீவன்



முயற்சி செய்யாமல் எதுவும் கிடைக்காது எனவும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் மூலம் மக்கள் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளனர் என்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

எனவே, திங்கட்கிழமை நடைபெறவுள்ள பேச்சுக்களில் சம்பள உயர்வு தொடர்பாக சாதகமான முடிவு கிடைக்கும் என நம்புகிறார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களால் முன்னெடுக்கப் பட்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து இடம்பெற்ற கடையடைப்புப் போராட்டம் ஆகியன தொடர்பாக ஹற்றனில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே ஜீவன் தொண்டமான் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தொழிலாளர்களுக்கான ஊதிய உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டத்துக்கு நாம் அழைப்பு விடுத்திருந்தோம். அந்தவகையில் தொழிலாளர்களின் போராட்டத்துக்கு சர்வமதத் தலைவர்கள், தொழிற் சங்கங்கள், வர்த்தகர்கள், சிவில் அமைப்புகள், ஆசிரியர்கள், தோட்டத்தொழிலில் அல்லாமல் ஏனைய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் என பலதரப்பினரும் இதற்கு ஆதரவு தெரிவித்தனர். எதிர்ப்பார்த்ததை விடவும் பேராதரவு கிட்டியது.

இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் உணர்வுபூர்வமாக ஆதரவு வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது கொழும்பிலுள்ள வர்த்தகர்களும் ஆதரவை நல்கியுள்ளனர். எட்டு சர்வதேச நாடுகளும் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தன.

மக்கள் மத்தியில் ஒற்றுமை இல்லை என்ற நினைப்பிலேயே கம்பனிகள் செயற்பட்டுவந்தன. இன்று தொழிலாளர்களின் ஒற்றுமை, பலம் என்பன காண்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல், பொதுவான விடயம், நியாயமாக இருந்தால் இணைந்து போராடுவதற்குத் தயார் என்ற தகவலையும் மக்கள் வழங்கியுள்ளனர்.

இதனிடையே எதிர்வரும் திங்கட்கிழமை பேச்சு நடக்கவுள்ளது. தொழிலாளர்களின் பலத்தைக்கண்டு கம்பனிகளும் நடுங்கியுள்ளன. சாதகமான தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம். சம்பள உயர்வு எப்போது கிடைக்கும் என்பது தொடர்பாக அறிவித்தால் திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

இதேவேளை, இது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பலத்தைக் காட்டுவதற்காக நடத்தப்பட்ட போராட்டம் அல்ல. கம்பனிகளுக்கு எதிரானது. மக்கள் தமது பலத்தைக் காட்டியுள்ளனர். முயற்சி செய்யாமல் எதுவும் கிடைக்காது. இதன்படி பாரிய போராட்டத்தை நடத்தி மக்களின் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளோம். – என்றார்.

காலைக்கதிர்

# அரசை நெருக்கடிக்குள் தள்ள ஒரு போதும் இடமளிக்கோம்!

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



அரசாங்கத்தை சர்வதேச மட்டத்தில் நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தையும், தேசிய வளங்களையும் பாதுகாக்கத் தொடர்ந்தும் போராடுவோமென நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைப் பாதுகாக்க முன்னெடுத்த போராட்டத்தில் வெற்றிபெற்றுள்ளோம்.

ஆட்சிக்கு வரும் முன் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தில் கூட்டணியமைத்துள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் உண்டு. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவரின் தலையீடு அநாவசியமானது.

பிற நாடுகளின் அதிகாரப் போட்டித்தன்மைக்கு இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசாங்கத்தையும் தேசிய வளங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைத்துத் தரப்பினருக்கும் உண்டு. நாட்டிலுள்ள தேசிய வளங்களை இலங்கை மக்கள் மாத்திரமே உரிமை கொண்டாட முடியும்.

தேசியவளங்களைப்பாதுகாப்பதற்கானபோராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம். 10 அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து முன்னெடுத்த போராட்டத்தால் அரசாங்கத்துக்குள் எவ்வித முரண்பாடுகளும் தோற்றம் பெறவில்லை. – என்றார்.

# ரவி மற்றும் அலோஸியஸ்க்கு பிணை வழங்கியது கொழும்பு மேல் நீதிமன்று!

*முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் பேப்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது.*

*அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்ட லஞ்ச வழக்கு தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று (வெள்ளிக்கிழமை) குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே இந்த பிணை வழங்கப்பட்டுள்ளது.*

*இந்த இருவரும் தலா 5 லட்சம் பெறுமதியான ரொக்கப் பிணையிலும், தலா 50 லட்சம் பெறுமதியான சரீர பிணையிலும் விடுவிப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.*

*மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரத்தில், பேசுபொருளான மொனார்க் தொடர்மாடி சொகுசு குடியிருப்பை மையப்படுத்தி, லஞ்ச ஊழல் விசாரணை சட்டத்தின் 19 ( உ) பிரிவின் கீழ் முதலாம், 2 ஆம் பிரதிவாதிகளாக முறையே ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன அலோசியஸ் ஆகியோர் பெயரிடப்பட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

# கொழும்பு - புத்தளம் வீதி இன்று திடீரென முடக்கம்!

*கொழும்பு - புத்தளம் ஏ - 03 பிரதான வீதி இன்று காலை 6 மணி முதல் மூடப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*குறித்த வீதி நாளை மாலை 6 மணி வரை மூடப்பட்டு இருக்கும் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.*

*நீர்கொழும்பு - கல்கந்த ரயில் சந்தியில் திருத்த வேலைகள் இடம்பெறவுள்ளமையால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.*

*இதனால் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு மக்களை பொலிஸார் வலியுறுத்துகின்றனர்.*

# திருமண நிகழ்வில் குழவி கொட்டு: மூவர் வவுனியா வைத்தியசாலையில்!

வவுனியா, இறம்பைக்குளம் ஆலயம் ஒன்றுடன் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் குழவிக் கொட்டுக்கு இலக்காகி மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் உள்ளிட்ட மூவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, இறம்பைக்குளம், நாகபூஷணி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற திருமண வைபவத்தில் கலந்து கொண்டவர்கள் மீது குழவிகள் கொட்டியதில் வவுனியா மாவட்ட செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெக்கெனடி உள்ளிட்ட மூவர் பாதிப்படைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன், ஏனைய இருவரும் சிகிச்சைகளின் பின் வீடு திரும்பியுள்ளனர்.

இந்த மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்கள் இதற்கு முன்னரும் பல தடவைகள் குழவிக் கொட்டுக்கு சிலர் இலக்காகியுள்ளனர். இது தொடர்பில் ஆலய மண்டப நிர்வாகத்தினர் ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்காமையின் காரணமாகவே பலரும் குழவிக் கொட்டுக்கு இலக்காகி வருகின்றனர் என சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

# வடக்கு மக்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதி செயற்படுகின்றார் என ஆளுநர் புகழாரம்!

நாம் காலனித்துவ ஆட்சியில் பெற்ற சுதந்திரம் தனியே அரசியல் சுதந்திரம் மட்டுமன்றி இந்த மக்களுக்கு வழங்கப்படவேண்டிய வாழ்வியல் சுதந்திரம் என்பதை அனைவரும் கருத்திற்கொள்ள வேண்டும் என வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வு இலங்கை முழுவதும் கொண்டாடப்பட்ட நிலையில் வட மாகாண ஆளுநர் பங்குபற்றிய சுதந்திர தின நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்த ஆளுநர் –

நீண்டகாலத்துக்குப் பின் ஒரு மாவட்டத்தின் சுதந்திர தின நிகழ்வில் தனக்கு பங்கு கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் எனத் தெரிவித்தார்.

பல சவால்களுக்கு மத்தியில் சுதந்திரக் காற்றை சுவாசித்த நாம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வடமாகாண மக்களின் வாழ்வியலை முன்னேற்ற வேண்டுமென்ற அவாவை முன்நிறுத்தி அவர்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

சுதந்திரம் என்பது முக்கியமாக இரு விடயங்களில் காணப்படுகின்றன. ஒரு மனிதனுக்கு செய்யக்கூடாத விடயங்களை செய்வதும் செய்யப்பட வேண்டிய விடயங்களை செய்யாமல் விடுவதுமே ஆகும். இதில் ஒரு மனிதனுக்கு செய்யப்பட வேண்டிய பல விடயங்கள் செய்யப்படாது மறந்துபோகும் தருணங்களே அதிகமாகும்.



மக்களுக்கு கிடைக்கவேண்டிய சந்தர்ப்பம் மறுக்கப்படும் விடயங்களில் தடைகளை தகர்த்து மக்களின் அபிவிருத்தியை முன்கொண்டு செல்லவேண்டிய கடமைப்பாட்டில் அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் மிகக் கவனமாகச் செயற்படவேண்டும்.

எனவே நாம் காலனித்துவ ஆட்சியில் பெற்ற சுதந்திரம், தனியே அரசியல் சுதந்திரம் மட்டுமன்றி இம் மக்களுக்கு வழங்கப்படவேண்டிய வாழ்வியல் சுதந்திரம் என்பதை அனைவரும் கருத்திற் கொண்டு அதனை வழங்கும் முக்கிய நிறுவனமாக திகழும் மாவட்ட செயலகம் அதனோடு இணைந்த பிரதேச செயலகம் மற்றும் அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.– என்றார்.

# இலங்கை சுதந்திர தினத்துக்கு எதிராக ஜேர்மனியில் திரண்டனர் தமிழ் மக்கள்!

மாபெரும் கவனவீர்ப்பு பேரணி ஜேர்மன் தலைநகர் பேர்லினில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜேர்மனியில் உள்ள தமிழர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல தடைகள் மற்றும் கடுமையான கொரோனா கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிகளையும் பறக்கவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# சுதந்திர தினத்தில் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் ஆர்ப்பாட்டம் தவறானது

## எஸ்.பி. திஸாநாயக்க இப்படிக் கருத்து



சுதந்திர நாளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் தவறான செயற்பாடுகளாகும்.

தமிழ் அரசியல்வாதிகள் இல்லாத பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள்.

தெற்கில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி பணிகள் வடக்கிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சுதந்திர தினத்தன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் முன்னெடுத்த போராட்டங்கள் தவறான செயற்பாடாகும்.

பிரித்தானிய காலணித்துவ ஆட்சியில் இருந்து இலங்கை விடுதலை பெறுவதற்கு தமிழ் – முஸ்லிம் தலைவர்கள் முன்னின்று செயற்பட்டார்கள். ஆகவே, இலங்கை பிரஜைகள் அனைவரும் இனம், மதம் மற்றும் மொழி பேதமின்றி சுதந்திரத்தைக் கொண்டாட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகள் இல்லாத பிரச்சினைகளை இருப்பதாக குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். தெற்கில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அரச சேவையில் திறமைக்கேற்ப முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன.

30 வருட கால யுத்தம் முழு நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியது. யுத்தம் முடிவடைந்த பிறகு குறுகிய காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் அபிவிருத்தி செய்யப்பட்டன.

சர்வதே அரங்கில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவித்துள்ளார்கள்.

இனப் பிரச்சினை என்பதொன்று கிடையாது. அரசியல்வாதிகளே இனப்பிரச்சினை என்ற விம்பத்தைத் தோற்றுவித்து அதில் அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு அரசியல் ரீதியிலான உரிமை மாகாணசபைத் தேர்தல் ஊடாக வழங்கப்பட்டன. அதனையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், தமிழ் அரசியல்வாதிகளும் கடந்த அரசாங்கத்தில் பாதுகாத்துக் கொள்ளவில்லை.

பிற்போடப்பட்டுள்ள மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தங்களுக்குத் தேவையான பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வார்கள். இனப்பிரச்சினைக்குத் தீர்வு அவசியம் என்று குறிப்பிடுவதால் எவ்வித பயனும் ஏற்படாது. – என்றார்.

## வலுக்கட்டாயமாக கோழியை பறித்த கான்ஸ்டபிள் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஜன.06

கொழும்பில் ஒரு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், கோழிப்பண்ணையிலிருந்து வலுக்கட்டாயமாக இரு கோழிகளை எடுத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டின் கீழ் வீரவில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திஸ்ஸமஹராம, கங்காசிறிபுரவில் உள்ள கோழிப் பண்ணை உரிமையாளரிடமிருந்து வந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பொலிஸ் கான்ஸ்டபிள் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபரை திஸ்ஸ மஹராம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## அத்தியாவசியப் பொருள்களின் விலையை நிலையானதாக பேண ஒப்பந்தம் கைசாத்து

அத்தியாவசிய பொருள்களின் விலையை எதிர்வரும் 3 மாத காலத்துக்கு நிலையான தன்மையில் பேணுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. கடந்த காலத்தை விட தற்போது அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை குறைவடைந்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட உணவுப் பொருள்களை நிவாரண விலையில் விற்பனை செய்ய கவனம் செலுத்தப்பட்டுள்ளது என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வர்த்தகத்துறை அமைச்சில் இடம்பெற்ற ஒப்பந்தம் கைச்சாத்திடல் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்தியாவசியப்பொருள்களின் விலையை நிலையாகப் பேண தனியார் துறையினர் முன்வந்துள்ளமை இதுவே முதற்தடவையாகும். அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் குறைத்து தரமான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை நுகர்வோருக்கு விநியோகிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 27 அத்தியாவசியப் பொருள்களின் விலையை எதிர்வரும் 3 மாத காலத்துக்கு நிலையாகப் பேண தேசிய உற்பத்தியாளர்கள், சிறு ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதற்கமைய எதிர்வரும் 3 மாத காலத்துக்கு சிவப்பு அரிசி, வெள்ளை அரிசி, வெள்ளை நாட்டரிசி, சம்பா, கீரி சம்பா, கோதுமை மா, வெள்ளை சீனி, சிவப்பு சீனி, தேயிலை தூள், சிவப்பு பருப்பு, பெரிய வெங்காயம், கடலை, உருளைக்கிழங்கு (இந்தியா), உருளைக்கிழங்கு (பாகிஸ்தான்), உலர் மிளகாய், ரின்மீன், நெத்தலி, கோழி இறைச்சி, மற்றும் உப்பு, பால்மா, சோயா



எண்ணெய், சவர்க்காரம் உள்ளிட்ட 27 அத்தியாவசிய பொருள்களின் விலையைப் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப்பொருள்களை சதொச மற்றும் க்யூ – சொப் ஊடாக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும். வாழ்க்கைச்செலவுகள் அதிகம் என எதிர்தரப்பினர் மாத்திரம் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலை மாத்திரமே சற்று அதிகமாகக் காணப்படுகிறது. அதனையும் எதிர்வரும் நாள்களில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

## மீரியாபெத்த நிலச்சரிவில் பாதிக்கப்பட்டோருக்கு நில ஒதுக்கீட்டுக்கான கடிதம் வழங்கி வைப்பு!

கொழும்பு, ஜன.06

2014 ஆம் ஆண்டில் மீரியாபெத்த தோட்டத்தில் நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மேலும் 134 குடும்பங்களுக்கு நில ஒதுக்கீட்டு ஒப்புதல் கடிதத்தை செந்தில் தொண்டமான் வழங்கிவைத்தார்.

இந்தக் குடும்பங்களுக்கு நில அளவீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வரைபடமும், தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் அனுமதியுடன் புதிய காணிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பேரிடர் அமைச்சின் செயலாளர் மேஜர் சுதந்த ரணசிங்க, பதுளை அரச அதிபர், ஹல்துமுல்ல பிரதேச சபைத் தலைவர் அசோக் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தினத்தை மையப்படுத்தி இந்தத் திட்டத்தை செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

## தேசியக் கொடிகளைக் குறைத்து பௌத்த இராணுவ கொடிகளுடன் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்!

இராணுவ அணிவகுப்புகள், போர் வெற்றியை பறைசாற்றுகின்ற கோஷங்களுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் இலங்கையின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் கொழும்பு சுதந்திர சதுக்க மண்டப வளாகத்தில் நடைபெற்று முடிந்தது.

பிரதமர், அமைச்சர்கள், முப்படை பிரதானிகள், சர்வதேச இராஜதந்திரிகள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். தேசியக் கொடிகளை குறைத்து பௌத்த சிங்கள கொடிகளுடனும், இராணுவ கொடிகளுடனும் சுதந்திர தின நிகழ்வு நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 7.15 மணிக்கு தேசபிதா டி.எஸ். சேனாநாயக்கவின் உருவச்சிலைக்கு முன்னாள் மலரஞ்சலி செலுத்தி ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அதிதிகளின் வருகை இடம்பெற்றது. முப்படை தளபதிகள், பொலிஸ்மா அதிபர் மற்றும் அவரது பாரியார், பாதுகாப்பு செயலாளர் மற்றும் அவரது பாரியார், பாதுகாப்பு பிரதானி, அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அவரது பாரியார், பிரதம நீதியரசர் மற்றும் அவரது பாரியார், சபாநாயகர் மற்றும் அவரது பாரியார், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியார், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியார் ஆகியோர் முறையே அதிதிகளாக வருகை தந்திருந்தனர்.

மேலும் வெளிநாட்டு தூதுவர்கள், இராஜதந்திரிகள், அமைச்சின் செயலாளர்கள், இராணுவ அதிகாரிகள் என பலரும் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதனை அடுத்து தேசியக்கொடி ஏற்றும் நிகழ்வு ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்டதுடன், 45 பாடசாலை மாணவ, மாணவிகளால் தேசியக் கீதம் இசைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களால் ஜயமங்கள கீதம் பாடப்பட்டதுடன், நாட்டுக்காக உயிர் நீத்த சகல தேசாபிமானிகளுக்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து ஜனாதிபதிக்கு மரியாதை வணக்கம் செலுத்தும் விதமாக 21 மரியாதை பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனை அடுத்தே ஜனாதிபதி நாட்டு



மக்களுக்கு உரையாற்றினார். ஜனாதிபதியின் உரையை அடுத்து இலங்கை தரைப்படை, இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை பொலிஸ், சிவில் பாதுகாப்பு படையணி மற்றும் தேசிய மாணவர் படையணி ஆகியவற்றின் மரியாதை அணிவகுப்புகளும் அதனைத் தொடர்ந்து கலாசார அணிவகுப்புகளும் இடம்பெற்றன.

இந்நிலையில் சுதந்திரதினத்தை முன்னிட்டு கடந்த மூன்று நாள்களுக்கு முன்னரே கொழும்பு சுதந்திர சதுக்க வளாகம் பலத்த பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட நிலையில் அப்பகுதியெங்கும் பௌத்த கொடிகளும், சௌபாக்கியத்தை வெளிப்படுத்தும் கடுஞ்சிவப்பு சிங்கள கொடிகளும், முப்படைகளின் ஒவ்வொரு படையணியையும் வெளிப்படுத்தும் இராணுவக் கொடிகளும் அளவுக்கு அதிகமாக பறக்கவிடப்பட்டிருந்தன. இந்தக் கொடிகளுக்கு மத்தியில் ஆங்காங்கே இலங்கையின் தேசியக் கொடிகளும் மிகக் குறைவாக பறந்தமையையும் பார்க்கக்கூடியதாக இருந்தது.

நாட்டில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கொவிட் – 19 வைரஸ் தொற்றுநோய் காரணமாக நேற்று முன்தின சுதந்திர தின நிகழ்வுகள் மிகவும் கட்டுப்பாட்டுடன், சுகாதார வழிமுறைகளுக்கு அமைய இடம்பெற்றன.

ஒவ்வொரு சுதந்திரதின நிகழ்வுகளின் போதும் பொதுமக்கள் நிகழ்வுகளை பார்வையிட அழைக்கப்படுகின்றமை வழக்கமாக இருந்தாலும் இம்முறை அவை அனைத்துமே நிறுத்தப்பட்டு வெறுமனே அதிதிகளுடன் மாத்திரம் நிகழ்வுகள் இடம்பெற்று முடிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# விவசாய அமைச்சின் கீழ் வரும் சில திணைக்களங்களை கிளிநொச்சி, மாங்குளத்துக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை!

## வடக்கு ஆளுநர் ஏற்பாடு

வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின்கீழ் வரும் விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வரும் காணித் திணைக்களம் என்பவற்றை மாங்குளம் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களுக்கு இடமாற்றுவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் என வடக்கின் அனைத்து மாவட்ட மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஆளுநர் சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, விவசாய அமைச்சின்கீழ் வரும் விவசாயத் திணைக்களம் மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் என்பவற்றை மாங்குளம் பகுதிக்கு இடமாற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்மூலம், அதிகளவு விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி நடைபெறும். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்கள் அதிக பயனடையக்கூடியதாக இருக்கும் என்று ஆளுநர் தெரிவித்துள்ளார்

இதேபோல், உள்ளூராட்சி அமைச்சின்கீழ் வரும் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் கிளிநொச்சிக்கு இடமாற்றப்படவிருப்பதாகக் தெரிவிக்கும் ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், அதிகளவு காணி தொடர்பான பிணக்குகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலேயே காணப்படுகின்றமையால், அந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு வசதியாக இந்த முடிவு எட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்ட காலம் முதல் அதன்கீழ் வரும் அனைத்து அமைச்சுக்களும், திணைக்களங்களும் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே செயற்பட்டு வருகின்றன.

இதனால், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் மாகாணசபை மூலமான தேவைகளை நிறைவேற்ற யாழ்ப்பாணத்துக்கேவரவேண்டியிருந்தது.

இப்போது ஆளுநர் சாள்ஸ் எடுத்திருக்கும் முடிவின்படி, வடக்கின் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் மாகாணசபை நிர்வாகத்தை சம அளவில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படும். வடக்கு மாகாணசபை, வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் மையமாக விளங்கும், மாங்குளம் பிரதேசத்திலேயே அமையவேண்டும் என்ற கோரிக்கை நீண்டாகலமாக பல தரப்புக்களாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# அங்கொட லொக்காவின் உறவினரது மாதிரியைக் கோருகின்றது இந்தியா!



உயிரிழந்த பாதாள உலகக்குழு உறுப்பினரான அங்கொட லொக்காவின் உறவினரது இரத்த மாதிரியை அனுப்புமாறு இந்திய அதிகாரிகள் இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் இந்தியாவில் உயிரிழந்த சந்தேக நபர் அங்கொட லொக்காதான் என்பதை உறுதி செய்யவே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மாதிரிகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத மேலும் 16 பேர் கைதாகியுள்ளனர்!

கொழும்பு, ஜன.06

சுகாதார நடைமுறைகளை பின்பற்றத்தவறிய மேலும் 16 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதிக்குள்ளே குறித்த 16 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணிய தவறிய குற்றச்சாட்டிலேயே பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில் கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 2 ஆயிரத்து 997 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுகின்றவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட இருவர் கைது!

ஊவா மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் பல வருட காலமாகக் கொள்ளை மற்றும் நகைத் திருட்டில் ஈடுபட்ட இருவரை பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித்த செனவிரத்ன தலைமையிலான குழுவினர் பசறை நகர் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் ஹாலிஎல, மஹியங்கன பகுதிகளை வசிப்பிடமாக கொண்ட 24, 29 வயதுடைய நபர்களாவர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

கடந்த மாதம் நடுப்பகுதியில் பசறை வீதி, 9ஆம் கட்டைப் பகுதியில் உள்ள பெல்ஹாதென்ன கிராமத்தின் வீதியில் சென்று கொண்டிருந்த பசறை பகுதியில் அரச நிறுவனம் ஒன்றில் தொழில் புரியும் பெண்ணொருவரின் கழுத்தில் அணிந்திருந்த தங்க மாலை மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் திருடப்பட்டுள்ளது. குறித்த பெண் சம்பவம் தொடர்பாகப் பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு புலனாய்வு பிரிவினரின் உதவியுடன் விசாரணையை ஆரம்பித்த பசறை பொலிஸார் இந்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக் கட்ட விசாரணையில் இந்த இருவரும் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

வெல்லவாய, அட்டாம்பிட்டிய உட்பட பல பகுதிகளில் பலவருடங்களாக வங்கி கொள்ளை, நகை திருட்டு என்பவற்றில் இவர்கள் ஈடுபட்டு வந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கொள்ளையிட்ட நகைகளை பதுளையிலுள்ள பிரபல அடகு கடன் நிறுவனங்களில் அடகு வைத்து பணமாக்கியுள்ளனர்.

அந்நகைகளையும், கொள்ளை சம்பவத்தில் ஈடுபடுவதற்காக பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பசறை பொலிஸார் மீட்டுள்ளமையோடு சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தோட்டதொழிலாளரின் ஆயிரம் ரூபா சம்பள விவகாரம்: நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்!

பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி நாடளாவிய ரீதியில் ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டமொன்று நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள தொழிற்சங்கங்களுக்கும், பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையே பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனம் தொடர்பாக இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுகளிலும் இணக்கம் ஏற்பட்டிருக்கவில்லை.

அதனைத் தொடர்ந்து தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் இடம்பெற்ற பேச்சிலும் எந்தவொரு சாதகமான தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை.



ஆகவே பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வேதன அதிகரிப்பு தொடர்பான விடயத்தை தொழில் அமைச் சர் நிமல் சிறிபால டி சில்வா, சம்பள நிர்ணய சபையிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்நிலையில் நாளை, சம்பள நிர்ணய சபையில் இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இத்தகையதொரு சூழ்நிலையிலேயே இ.தொ.கா.வின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், அதன் ஆரம்பகட்டமாக முதலாளிமார் சம்மேளனத்திற்கும் சம்பள நிர்ணய சபைக்கும் அரசாங்கத்திற்கும் ஓர் அழுத்தம் கொடுக்கும் முன்னோடி ஏற்பாடாக நேற்று அமைதியான ஒரு நாள் பணிபகிஷ்கரிப்பை நடத்த அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில் மலையகத்தின் பெரும்பாலான பகுதிகளில் நாளாந்த வேதனத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி, ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தேசிய பாரம்பரியத்தை தீர்மானித்தல், அடையாளம் காண்பது தொடர்பான இடைக்கால அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு!

இலங்கையின் தேசிய பாரம்பரியத்தைத் தீர்மானிக்கவும் அடையாளம் காணவும் ஒரு வழிமுறையை அறிமுகப்படுத்துவது தொடர்பான இடைக்கால அறிக்கை அந்தக் குழுவின் உறுப்பினர்களால் விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கடந்த புதன்கிழமை கையளிக்கப்பட்டது.

அந்த இடைக்கால அறிக்கைக்கு அமைய முன்வைக்கப்படும் முன்மொழியப்பட்ட வழிமுறைகள் பொதுமக்களின் கருத்துக் கோரலுக்காக எதிர்வரும் 8ஆம் திகதி நாளிதழ்களில் பகிரங்கமாக வெளியிடப்படவுள்ளது.

தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் கோரிக்கைக்கு அமைய புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் இலங்கையின் தேசிய பாரம்பரியத்தை தீர்மானிக்கவும் அடையாளம் காணவும் ஒரு வழிமுறையை கொண்டு வருவதற்கு அமைச்சரவை ஒப்புதலை பெற்றுக்கொண்டார்.



அதற்கமைய தேசிய பாரம்பரியத்தை தீர்மானிக்கவும், அடையாளம் காணவும் உரிய வழிமுறையைத் தயாரிப்பதற்கு 16 நிபுணர்களைக் கொண்ட ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவானது பேராசிரியர் இந்துருகாரே தம்மரதன தேரர், பேராசிரியர் மாலனி அதகம, பேராசிரியர் ரோஹண பீ மஹாலியனஆராச்சி, சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, பேராசிரியர் யசாஞ்சலி ஜயதிலக, பேராசிரியர் முதியன்சே திசாநாயக்க, கலாநிதி மங்கள கடுகம்பல, கலாநிதி ஜானகி ஜயவர்தன, கலாநிதி டீ.சனாதனன், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.எம். யசீர், நாட்டுபுறவியல் விமர்சகர் மஹிந்த குமார தளுபொத, தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், தொல்பொருள் ஆய்வாளர், தேசிய காப்பகங்கள் மற்றும் அருங்காட்சியகங்களின் துறைகளின் பணிப்பாளர் நாயகம் மற்றும் கலாசார திணைக்கள பணிப்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கியுள்ளது.

குறித்த இடைக்கால அறிக்கையை கையளிக்கும் நிகழ்வில் தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதமரின் செயலாளர் காமினி செனரத் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# சர்வதேச வாக்குறுதிகளை இலங்கை அரசு கிழக்கு முனையத்தில் பின்பற்ற வேண்டும்!

## இந்தியா வலியுறுத்தல்

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக இலங்கை, தனது சர்வதேச வாக்குறுதிகளை பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியமாகுமென இந்தியா மீண்டும் அறிவித்துள்ளது.

கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அனுரக் ஸ்ரீவத்சவ இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

இந்தியா, இலங்கை மற்றும் ஜப்பான் அரசாங்கங்கள், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்திசெய்து இயக்குவதற்காக கடந்த 2019 மே மாதம் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டமை அனைவரும் தெரிந்த விடயமாகும்.

மேலும், துறைமுகம், எரிசக்தி போன்றவற்றில் இலங்கையின் உட்கட்டமைப்புகளை இந்தியா, சீனாவின் முதலீடுகளுடன் அபிவிருத்தி செய்வது, பரஸ்பர நன்மையளிக்க கூடிய விடயமாக காணப்படும் என நாங்கள் நம்புகின்றோம்.

ஆகவே, இந்த விடயம் தொடர்பாக சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றியமை தொடர்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளார். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# வனப்பகுதியை 30 வீதமாக அதிகரிப்பதற்குத் தீர்மானம்!

கொழும்பு, ஜன.06

15 மாவட்டங்களில் உள்ள 69 காடுகளை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்கும் வர்த்தமானியில் வனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க கையொப்பமிட்டார். 30 சதவீதமாக வனப்பகுதியை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வனப்பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

15 மாவட்டங்களுக்குச் சொந்தமான 40,761.11 ஹெக்டேயர் நிலப்பரப்பை கொண்டுள்ள 69 காடுகளை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக புத்தளம் மாவட்டத்தில் 47.41 ஹெக்டேயர் நிலப்பரப்பையுடைய 5 காடுகள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மொனராகலை, குருநாகலை, அநுராதபுரம், காலி, புத்தளம், நுவரெலியா, கண்டி, மன்னார், பொலன்னறுவை, அம்பாறை, கேகாலை, கிளிநொச்சி, பதுளை, கம்பஹா, அம்பாந்தோட்டை, ஆகிய மாவட்டங்களில் உள்ள காடுகள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கைச்சாத்திட்டுள்ள வர்த்தமானி பத்திரம் வனபாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரரால் பாலித பிரனாந்துவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வனப்பகுதிகளை பாதுகாக்கும் நோக்கிலே 15 மாவட்டங்களில் உள்ள 69 காடுகள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. வனப்பாதுகாப்பு தொடர்பில் நடைமுறையில் உள்ள சட்டத்தைத் திருத்தியமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வனமீள் புத்தாக்கம் தொடர்பில் சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைச் செயற்படுத்தும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. - என்றுள்ளது.

# கண்டியில் பிராந்திய கொன்சியூலர் அலுவலக அங்குரார்ப்பணம் இன்று!

கொழும்பு, ஜன.06

வெளிவிவகார அமைச்சு கண்டியில் பிராந்திய கொன்சியூலர் அலுவலகமொன்றைத் திறக்கவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் வழிகாட்டுதலின் கீழ், பொதுமக்களுக்கு வழங்கும் சேவைகளின் செயற்றிறனையும், செயலாண்மையையும் மேம்படுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் தேசியக் கொள்கைக் கட்டமைப்பான 'நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான செழிப்பான பார்வை' எண்ணக்கருவிற்கு உத்வேகமளிக்கும் முகமாக, பிராந்திய கொன்சியூலர் அலுவலகமொன்றை வெளிநாட்டு அமைச்சு இன்று (சனிக்கிழமை) பிற்பகல் 2 மணிக்கு கண்டியில் திறந்து வைக்கவுள்ளது.

பேராதனை, கட்டம்பேயில் உள்ள மஹிந்த ராஜபக்ஷ தகவல் தொழில்நுட்ப மையத்தில் அமைந்துள்ள பிராந்திய கொன்சியூலர் அலுவலகமானது, வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகேவின் முன்னிலையில் அமைச்சர் குணவர்தனவால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இந்த கொன்சியூலர் அலுவலகத்தைத் திறந்து வைக்கின்றகமையானது, மத்திய மாகாணம் மற்றும் அதன் அண்மித்த பகுதிகளில் உள்ள பொது மக்கள் கொழும்பில் உள்ள வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவுக்குச் செல்லாமல் கொன்சியூலர் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும்.

பொதுமக்களுக்காக விரிவுபடுத்தப்பட வேண்டிய கொன்சியூலர் சேவைகளில் வெளிநாடுகளில் பயன்படுத்துவதற்கான பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்கள், கல்வி மற்றும் ஏனைய சட்ட ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துதல், வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவிகளை வழங்குதல், புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களின் நிவாரண மற்றும் இழப்பீட்டுக் கோரிக்கைகள் மற்றும் வெளிநாட்டிலிருந்து மனித உடல்களைத் திருப்பிக் கொண்டு வருதல் ஆகியன உள்ளடங்கும்.

# கிழக்கில் காலையில் பனிமூட்டம்; மாலை வேளையில் கடும் மழை!

## பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கிழக்கு மாகாணத்தில் காலை வேளையில் அதிகளவிலான பனிமூட்டம் காணப்படுவதுடன் மாலை நேரத்தில் காற்றுடன் கூடிய மழைபெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற கரையோர மாவட்டங்களில் தொடர்ந்தும் குளிரான காலநிலை காணப்படுவதுடன், மழை பெய்து வருவதால் விவசாயிகள், மீனவர்கள் உட்பட நாளாந்த தொழிலில் ஈடுபடும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தாழ்நில பிரதேசங்கள் வெள்ள நீரால் நிரம்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கலாபூஷணம் ஏ.எம்.எம்.அலியின் நினைவுரையும், நூல் வெளியீடும்

(எப்.முபாரக்)

தேடல் கலை இலக்கிய அமைப்பு ஏற்பாடு செய்துள்ள மறைந்த கலாபூஷணம் ஏ.எம்.எம்.அலியின் நினைவுரையும், அவர் பற்றிய நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிண்ணியா அல் அதான் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஸீ.முகம்மது முஸ்இல் தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முகம்மது கனி பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது, கலாபூஷணம் அ.கௌரிதாசனின் கவிஞர் அலி பற்றிய சிறப்புரை ஒன்றும் இடம்பெறவுள்ளது.

மேலும் அ.கௌரிதாசன் எழுதிய கவிஞர் அலி பற்றிய நினைவுக்குறிப்பு நூல் ஒன்றும் இந்த வைபவத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளது.

இலக்கியவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள், மர்ஹூம் அலியின் குடும்பத்தினர் இந்த வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுகாதார வழிகாட்டலுக்கேற்ப நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிரசவத்துக்காக சேர்க்கப்பட்ட இளம் தாயும் சிசுவும் சாவு!

## மட்டக்களப்பில் சோகம்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரசவத்துக்காக சேர்க்கப்பட்டிருந்த இளம்தாயும், சேயும் மரணமடைந்த சம்பவம் ஓட்டமாவடி - பாலைநகர் மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலைநகரைச் சேர்ந்த 30 வயதுடைய இளம் தாயொருவர் பிரசவத்துக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணை பரிசோதனை செய்த வைத்தியர்கள், பெண்ணின் வயிற்றில் சிசு உயிரிழந்து காணப்பட்டமையை அடுத்து, சத்திர சிகிச்சை மூலம் உயிரிழந்த சிசுவை வெளியே எடுத்துள்ளனர்.

அத்துடன், தாய் அதே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் மரணமடைந்துள்ளார்.

இந்நிலையில் அந்தப் பெண்ணின் சடலத்தை வைத்தியசாலை நிர்வாகத்திடமிருந்து பொறுப்பேற்ற குடும்பத்தினர், பாலைநகர் ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்தனர்.

# குவைத்தில் கைவிடப்பட்டுள்ள இலங்கைப் பணிப் பெண்கள்!



இலங்கைக்கு அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுக்கும் பணிப் பெண்கள் இலங்கை திரும்ப முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கவனிப்பாரற்ற நிலையில் கொரோனாவால் தொழில் வாய்ப்பை இழந்து சொந்த நாட்டுக்கு செல்லமுடியாமல் பல நாள்களாக அகதியை போல் வெளிநாட்டு தூதரகங்களுக்கு முன்னால் காத்துக் கிடப்பதாக அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனினும், குவைத்துக்கான இலங்கை தூதரகம் இவர்களை கண்டுகொள்ளாது, கைவிட்டு இருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கிய பங்காளிகளான வெளிநாட்டு வீட்டுப் பணிப் பெண்களின் இந்த நிலை கவலையளிப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## நெற்பயிரில் காய்ச்சலும் பாய்ச்சலும்

நெற்பயிரில் 12 - 24 மணி நேரம் வரை நீரைத் தேக்கி வைத்தல் வேண்டும். அதனைத் தொடர்ந்து வரும் 6 - 7 நாள்கள் நீர்ப்பாசனம் மேற்கொள்ளத் தேவையில்லை. இவ்வாறு உலரவிடும் போது மண்ணீரம் வயற்கொள்ளளவுக்கு அல்லது வயற்கொள்ளளவு நிலைக்கு அண்மித்ததாக வரும்போது மீண்டும் 12 - 24 மணிநேரம் வரை நீரைத் தேக்கி வைத்து மீண்டும் 6 - 7 நாள்கள் நீர்ப்பாசனம் மேற்கொள்ளத் தேவையில்லை. இவ்வாறு மாறிமாறி ஈரப்படுத்தியும் உலர்த்தியும் நீர்ப்பாசனம் செய்யும் போது கிடைக்கும் நீரை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தமுடியும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# எந்தத் தாக்குதல் நடத்தினாலும் நாம் அஞ்சுபவர்கள் அல்லர்!

## சிவாஜிலிங்கம் வீர முழக்கம்



பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணியை குழப்புவதற்கு யார் எத்தகைய தாக்குதலை நடத்தினாலும், நாம் அதற்கு அஞ்சுபவர்கள் அல்லர் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடைபெறுகின்ற பேரணி நேற்று மூன்றாவது நாளாக நடைபெற்றது.

இந்நிலையில் திருகோணமலை – மடத்தடிச் சந்தியில் வைத்து, எம்.கே.சிவாஜிலிங்கம் பயணித்த வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக எம்.கே.சிவாஜிலிங்கம் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

திருகோணமலை – மடத்தடிச் சந்தியில் வைத்து நானும், திருமதி அனந்தி சசிதரனும் பயணித்த வாகனத்தை பெரும்பான்மையினர் தாக்கினர்.

இவ்வாறு தாக்குதலை நடத்தியவர்களின் கைகளில் பெற்றோல் போத்தல்களை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மேலும் பொலிஸாரும் பாதுகாப்பு பணிகளில் இருந்த வேளையில்தான், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் விழ விழ எழுவோம், வீரு கொண்டு எழுவோம் என்றதன் அடிப்படையிலேயே நாங்கள் இந்தப் பயணத்தை தொடர்வோம். மேலும் இத்தகைய தாக்குதலுக்கு நாங்கள் ஒரு போதும் அஞ்சப் போபவர்கள் அல்லர்.

இந்த பேரணியை நடத்துவதற்கு எத்தகைய தடைகள் வந்தாலும் அதனை முறியடித்து பொலிகண்டி வரை நிச்சயம் முன்னேறி செல்வோம். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெரும்பான்மை மக்களுக்கு எதிரான பேரணியல்ல இது!

## எமக்கும் இந்த நாடு சொந்தம்; சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



சிறுபான்மை மக்கள், தங்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட பேரணியேயன்றி, இது பெரும்பான்மை மக்களுக்கு எதிரான பேரணியல்ல.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுபான்மை மக்களுக்கு எதிராக அரசால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையைக் கண்டித்தும் சிறுபான்மை மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காகவே இந்தப் பொத்துவில் முதல் பொலி கண்டி வரையான பேரணி முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த பேரணி பெரும்பான்மை மக்களுக்கு எதிரானது அல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த நாட்டில் சிங்கள, பௌத்த மக்களுக்கு இருக்கும் சகல உரிமைகளும் தமிழ் பேசும் மக்களாகிய எங்களுக்கும் உண்டு. ஏனெனில் நாங்களும் இந்த நாட்டின் குடிமக்கள் என்றாலும் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வில் பேசும்போது தான் சிங்கள பௌத்தன் என்று தெரிவித்தார்.

அவர், அவ்வாறு கூறியது எங்களுக் குப் பிரச்சினை இல்லை. எனினும், இந்த நாட்டின் ஜனாதிபதி, பெரும்பான்மை மக்களுக்கும் மாத்திரம் சேவையாற்றுவேன் என்று தெரிவிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

எங்களுக்கும் இந்த நாடு சொந்தமா னது. நாங்களும் வசிக்கின்றோம். அதே போன்று பெரும்பான்மை மக்களும் இந்த நாட்டில் வசிப்பதற்கான உரிமை உள்ளது. எங்களின் உரிமைகளை அகற்றமுடியாது.

இதனடிப்படையில், நாங்கள் இந்தப் பேரணியை மேற்கொள்கின்றோம் – என்றார்.

# 7ஆம் திகதி வரை போராட்டம் நீடிப்பு

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டப் பேரணி மேலும் ஒரு நாள் நீடிக்கப் பட்டுள்ளது.

கடந்த 3ஆம் திகதி பொத்துவிலில் ஆரம்பமான பேரணி இன்று 6ஆம் திகதி பொலிகண்டியைச் சென்றடையும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவில் முதல் பொலிகண்டி வரை: நீதிக்கான போராட்டம் வெற்றிபெறட்டும்

## நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வாழ்த்து



திட்டமிட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வேண்டி நடைபெறுகின்ற ஈழச் சொந்தங்களின் தொடர்ப் போராட்டமும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியும் வெற்றிபெறட்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

ஈழத்தில் திட்டமிட்டு நிகழ்த்தப் பட்ட இனவழிப்புப் போரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கேட்டு கிளிநொச்சி, கந்தசுவாமி கோயில் முற்றத்தில் நடைபெற்று வரும் பட்டினிப் போராட்டமும், பொத்துவில் தொடங்கியிருக்கும் நடைபயணமும் நம்பிக்கையைத் தருகின்றது.

பேரினவாத ஆட்சியாளர்களின் கோர அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் நெஞ்சுரத்தோடு போராட்டத்தை முன்னெடுத்திருக்கும் ஈழச் சொந்தங்களைப் பெரிதும் போற்றுகின்றேன்.

கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தாயக விடுதலைக்காகவும், தங்களது மண்ணுரிமைக்காகவும் போராடிய தமிழ் மக்கள் மீது, இனவெறியும், இனத்துவேசமும் கொண்டு, பல்வேறு அடக்குமுறைகளை ஏவி, அரச பயங்கரவா தத்தின் மூலமும் உள்நாட்டுப் போர் மூலமும் இரண்டு லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த இனப்படுகொலை நிகழ்ந்து பத்தாண்டுகளாகியும் அது குறித்து எவ்விதப் பன்னாட்டு விசாரணையும் நடத்தப்படாத நிலையில் அதற்கான நீதியைக் கேட்டு நிற்கின்றோம். அனைத்துலக நாடுகளும் கைவிட்ட கையறு நிலையிலும் சர்வதேசச் சமூகத்திடம் மன்றாடி வருகின்றோம்.

தமிழர்களின் போராட்டங்களுக்குச் செவிசாய்க்காத இலங்கை அரசு இனவழிப்பு நடவடிக்கைகளை இன்னும் தீவிரப்படுத்தியுள்ளதை அண்மைக்காலமாக ஈழத்தில் நடைபெறும் நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை முழுக்க இராணுவமயமாக்குவது, தமிழர் காணிகளை ஆக்கிரமிப்பது, புதிய சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி, பூர்வக்குடிகளான தமிழர்களின் இருப்பைக் குறைப் பது, இருநூறுக்கும் மேற்பட்ட தமிழர் வழிபாட்டுத் தலங்களைச் சிதைத்தழிக்க முயல்வது, புத்த விகாரைகளைப் புதிதாக நிறுவுவது, தமிழ் மக்களின் இன, மொழி, பண்பாடு ஆகியவற்றுக்கான வரலாற்று அடையாளங்களை முற்றலுமாக அழிப்பது என மறைமுகமாகவும், நேரடியாகவும் இன வழிப்பில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், இஸ்லாமிய மக்களின் பாரம் பரிய சமயச் சடங்கான இறந்தவர்களைப் புதைக்கும் செயற்பாடுகளுக்குத் தடைவிதித்து, உடல்களை எரியூட்டி வருவதுடன், அதற்கு எதிராகப் போராடும் இஸ்லாமியர்களை அடக்கி ஒடுக்குவது, விசாரணை ஏதுமின்றி அரசியல் கைதிகளாகச் சிறைகளிலுள்ள தமிழர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்க மறுத்து சிங்களக் கைதிகளை மட்டும் விடுவிப்பது, மனித உரிமைமீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள் மற்றும் சமூகச் செயற் பாட்டாளர்களை அச்சுறுத்தி அவர்களின் பேச்சுரிமை, எழுத்துரிமையைப் பறிப்ப தெனப் பல்வேறு தொடர் இனவெறித் தாக்குதல்களை ஒவ்வொரு நாளும் நடத்திக் கொண்டிருக்கின்றது இலங்கை அரசு.

இந்தநிலையில், எத்தகைய அடக்கு முறைகளை ஏவினாலும், இனவழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், தமிழர்களின் உரிமைப்போராட்டம் தமக்கான நீதியைப் பெறும்வரை ஒருநாளும் ஓயப்போவதில்லை என்பதை உணர்த்தும் விதமாக நடை பெற்றுக் கொண்டிருக்கும் தற் போதையப் போராட்டங்கள் சிங்கள ஆட்சியாளர்களைக் கலக்கத்திற்குள் ஆழ்த்தியிருக்கின்றது.

அந்தவகையில், கிளிநொச்சி கந்த சுவாமி கோயில் முன்றிலில் சுழற்சி முறையிலான பட்டினிப் போராட்டமும், தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை களைக் கண்டித்துப் பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரை நடைப்பயணமும் தொடங்கப் பெற்றுள்ளதை அறிந்தேன்.

இலங்கையின் சுதந்திர தின நாளை கறுப்பு நாளாகக் கடைப் பிடித்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களைக் கண்டுபிடித்துத் தரக்கோரி அவர்களது உறவுகளால் தொடங்கப்பட்டுள்ள நீதிக்கான இப்போராட்டத்தை முழுமையாக ஆதரிக்கிறேன்.

போராட்டம் வெற்றியை நிலை நாட்டவும், கோரிக்கைகள் நிறைவேற்றம் செய்யப்படவும் எமது உளப்பூர்வமான வாழ்த் துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் – என்றுள்ளது.

# நீதிக்கான பேரணியின் மூன்றாம் நாள் பதிவுகள்



# எதிர்க்கட்சி பிரபலங்களின் பிரஜாவுரிமையை இரத்துச் செய்வதற்கு அரசு பாரிய முயற்சி!

## கரு ஜயசூரிய ஆரூடம்

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய அடுத்த தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளில் முன்னணியில் இருப்பவர்களின் பிரஜாவுரிமையை இல்லாமல் செய்து ஏகாதிபத்தியதுக்கான வழி அமைப்பதே அரசாங்கத்தின் திட்டமாகும். அத்துடன் முறைப்பாட்டாளர்களுக்கு தண்டனை வழங்கவேண்டும் என பரிந்துரைக்கப்பட்டிருப்பதானது, பிரபல்யமாக பேசப்படும் கெகில்லே மன்னரது ஆட்சியில்கூட பதிவானதில்லை என முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரை தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எந்தவொரு நாட்டினதும் கடந்த காலத்தை பார்க்கும்போது அதிகமான தவறுகள் இடம்பெற்றிருக்கும். என்றாலும் நாடொன்றின் எதிர்காலம் சிறப்பாக இருக்கவேண்டுமாக இருந்தால், அவ்வாறான தவறுகளின் மூலம் படிப்பினை பெற்று, அதன் தவறுகள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். நாடு என்ற வகையில் கடந்த காலத்தில் மேற்கொண்ட தவறு என்பதை அறிந்துகொண்டே, அதன் பிரதிபலன்கள் எமது கண் முன்னே இடம்பெறுகின்றமையைக் கண்டிருந்தும், அதனை மீண்டும் யாராவது செய்ய முயற்சிப்பாரானால், அது அறிந்துகொண்டே தேசத்துக்கு செய்யும் பாரிய குற்றமாகும்.

1978 இல் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்து சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜா உரிமையை இல்லாமலாக்குவதற்கு, ஆறில் மூன்று அதிகாரம் இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கம் தயாரானது. அப்போது இந்த செயற்பாட்டை நாடாளுமன்றம் அனுமதித்தாலும் சமூகத்தில் பல குழுக்கள் அதனை அனுமதிக்கவில்லை என்பது எமக்கு ஞாபகத்தில் இருக்கின்றது. அரசாங்கத்துக்குள்ளேயே அதற்கு எதிரான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

என்றாலும் 40 வருடங்களுக்கு பின்னர் இன்றுபோன்ற காலத்தில் அவ்வாறான ஜனநாயக விரோத முயற்சிகளை மீண்டும் காணாமல் செய்வதற்கு நாங்கள் எண்ணம் கொள்வோம். அரசியல் பழிவாங்கல் அற்ற, தூய்மையான ஆட்சி ஒன்றுக்காக ஆணை பெற்றுக்கொண்ட ஆளும் அரசாங்கம், இவ்வாறான செயற்பாட்டின்பால் செல்லும் என இந்த அரசாங்கத்தை அதிகாரத்துக்குக் கொண்டு வந்த யாரும் நினைத்திருக்கார். நாங்களும் நினைக்கவில்லை.

என்றாலும் பாரிய விளைவுகளுக்கு வழிவகுக்கும் அந்த மோசமான தருணம் தோன்றுவதை தற்போது காணக்கூடியதாக இருக்கின்றது. அரசாங்கத்துக்கு நெருக்கமான பல புத்திஜீவிகளின் அமைப்புகள் மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தன, ஜனநாயக முன்மாதிரியான ஆட்சியொன்று அமையும் என்று. அதற்காகவே கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது 69 லட்சம் பேர் வாக்களித்திருந்தார்கள். என்றாலும் தற்போது அந்த மக்களின் எதிர்பார்ப்புகள் வீணாகி இருக்கின்றன.



மேலும் இந்த அரசாங்கத்தின் நோக்கம் தற்போது எங்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றது. அவர்களுக்கு தேவை யாக இருப்பது, அடுத்த தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளில் தெரிவுசெய்யப்பட்ட முன்னணி உறுப்பினர்கள் சிலரது பிரஜாவுரிமையை இல்லாமலாக்கி, ஏகாதிபத்தியத்துக்கு வழி அமைப்பதாகும்.

கடந்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை சமூகமயப்படுத்தப்பட்டிருக்கும் அறிவிப்புக்களுக்கமைய, அந்த அறிக்கை நீதிமன்றத்துக்கு செய்யும் அவமானமாகும் என்பதே அதிகமான சட்டத்துறை சார்ந்த நிபுணர்களின் நிலைப்பாடாகும். ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மூலம் இந்த நாட்டில் முன்னணி அரசியல்வாதிகள் உட்பட கடமைகளை நேர்மையாக மேற்கொண்ட சில அரச அதிகாரிகளை அழித்துவிடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை எம்மால் தெளிவாக காணக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் இந்த ஆணைக்குழு வழங்கியிருக்கும் பரிந்துரைகள் மக்கள் மத்தியில் நகைச்சுவையாகி இருக்கின்றன. அதில் சில பரிந்துரைகளில், நீதிமன்றங்களில் தற்போது விசாரிக்கப்பட்டுவரும் பல வழக்குகளின் குற்றவாளிகளை விடுவித்து விடுதலை செய்வதற்கு பரிந்துரை செய்து, முறைப்பாட்டாளர்களுக்கு தண்டனை வழங்குவதற்கும் பிரேரித்திருக்கின்றது. பிரபல்யமானவர் எனத் தெரிவிக்கப்படும் கெகில்லே மன்னர் கூட இவ்வாறாதொன்றை செய்திருப்பார் என நினைத்துப்பார்க்க முடியாது. என்றாலும் இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை ஊடாக 22 குற்றவாளிகளை பெயரிட்டு 79 வழக்குகளையும் தள்ளுபடி செய்யுமாறு பரிந்துரை செய்திருக்கின்றது.

மேலும் ஆணைக்குழுவின் அறிக்கைக்கமைய, குற்றவாளிகளை விடுதலை செய்வதற்கும் முறைப்பாட்டாளர்களைத் தண்டிப்பதற்கும் பரிந்துரைக்கப்படும் அதிகமான வழக்குகளை அந்தந்த நீதிமன்றங்களுக்கு சாட்டுவதற்கு ஆலோசனை வழங்கியிருப்பது அரசாங்கத்தின் சட்டமா அதிபராலாகும்.- என்றுள்ளது.







சுன்னாகம் றோட்டறக்ட் கழகம் 26 வருடங்களாக எமது பிரதேசத்தில் இயங்கி வரும் சமூக சேவைக் கழகங்களுள் ஒன்றாகும். இந்தக் கழகத்தின் அடுத்த ஒரு மைல் கல்லாக சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தினரால் பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயன் பெறக்கூடிய வகையிலான பஸ் நிழற்குடை ஒன்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு அருகில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

இதனை யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் தலைவர் Rtn.Phf.அனுராஜ், வலிகாமம் வடக்கு தவிசாளர் சோ. சுகிர்தன், யா/யூனியன் கல்லூரியின் அதிபர் தி.வரதன் மற்றும் யா/தந்தை செல்வா ஆரம்ப பாடசாலையின் அதிபர் த.வாமதேவன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

றோட்டறக்ட் கழகங்களின் செயற்பாடுகள் மற்றும் சமூகத்துக்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் விடயங்கள் அடங்கியதாக இந்த பஸ் நிழற்குடை வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை மாணவர்களும் வாசகர்களும் பயன்பெறும் வகையிலான நூலகத் தொகுதி ஒன்றும் இதனுடன் இணைத்து அமைக்கப்படுள்ளமை மேலும் வரவேற்கத்தக்க விடயமாகக் காணப்படுகின்றது.

# கொத்துரொட்டி போடுவதுபோல் அரசமைப்பு தயாரிக்க முடியாது!

## இப்படிக் கூறுகின்றார் நீதி அமைச்சர்

கொழும்பு, பெப்.06

'ஒரு நாடு ஒரு சட்டம்' என்ற வரையறை தொடர்பாக அரசாங்கத்திற்குள் பேச்சு நடத்த வேண்டும் எனவும், முன்நோக்கி செல்லும் போது அவசியமற்ற சட்டங்கள் இருந்தால் அவற்றை நீக்கத் தயார் எனவும் நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கொத்து ரொட்டியை தயாரிப்பது போல உடனடியாக புதிய அரசமைப்புச் சட்டத்தை கொண்டுவர முடியாது எனவும், இது தொடர்பாக சமூகத்துக்கு விளக்கப்பட்டு கலந்துரையாடல்களை ஏற்படுத்த வேண்டும் எனவும், சகல இனங்களின் உதவியுடன் சிறந்த நாட்டை உருவாக்க அதனை சரியான முறையில் செய்ய வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க அனைத்து தரப்பினரின் ஆதரவு அவசியம். சட்டத்தை மாத்திரமல்ல, அதனை செயற்படுத்துவதில் துரிதம், இலகு மற்றும் குறைந்த செலவு முறையும் அவசியம்.

சட்டத்தின் ஆதிபத்தியம் தொடர்பாக பிரஜைகளின் நம்பிக்கை அத்தியாவசியமானது எனவும் நீதியமைச்சர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசும் போதே நீதியமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

### முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்த உறவுகளுக்கு போராட்டக்காரர்களால் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்ட நீதிக்கான பேரணி, நீதிமன்றம், பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் அரச புலனாய்வாளர்கள் ஆகியோரின் பல தடைகளையும் தாண்டி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

### கொரோனாச் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - நாவல பகுதியைச் சேர்ந்த 89 வயதான ஆண் ஒருவர் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

நுவரெலியா - பொகவந்தலாவையைச் சேர்ந்த 72 வயதான ஆண் ஒருவர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தநிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - 03 ஐச் சேர்ந்த 73 வயதான ஆண் ஒருவர், கடந்த 2ஆம் திகதி தனது வீட்டில் உயிரிழந்துள்ளார்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் நாட்டில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 343 ஆக அதிகரித்துள்ளது.

### பருத்தித்துறை நீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிவான் நீதிமன்றத்தில் பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கே இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பொதுத்தொல்லையை ஏற்படுத்தல், கொரோனாத் தடுப்புக்கான சுகாதார நடைமுறைகளை மீறுதல் உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த விண்ணப்பங்கள் பொலிஸாரால் தனித்தனியே தாக்கல் செய்யப்பட்டன.

பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகி கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

இதையடுத்து இரு தரப்பு விடயங்களையும் ஆராய்ந்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன், பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று தடை உத்தரவு வழங்கி கட்டளை வழங்கினார்.

பேரணியில் பங்கேற்போர் பல மாவட்டங்கள் ஊடாக அங்குள்ளவர்களையும் இணைத்து வருவதால் கொரோனா நோய்த்தொற்று ஏற்படவாய்ப்புள்ளதால் இந்தத் தடை உத்தரவு வழங்கப்படுகின்றது என்று நீதிவான் கட்டளையில் சுட்டிக்காட்டினார்.

# காணாமற்போன உறவுகளைக் கொரோனா தாக்கும் சு.கவினரையும் அமைச்சர் தயாசிறியையும் தாக்காது!

## யாழ். பொலிஸாரினது கண்டுபிடிப்பு இது என்கிறார் விந்தன் கனகரட்ணம்



காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடியலையும் தாய்மாரை தாக்கும் கொரோனா அரச அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவையோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரையோ தாக்காதா எனக் கேள்வி எழுப்பியுள்ளார் தமிழீழ விடுதலை இயக்க முக்கியஸ்தரும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினருமான விந்தன் கனகரட்ணம்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றிற்கு பதிலளித்த அவர், கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் , காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி இலங்கையின் சுதந்திர தினத்தில் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தார்கள்.

அங்கு வருகை தந்த இலங்கை காவல் துறையினர் கொரோனாத் தொற்று ஏற்படலாமென தெரிவித்து அவர்களது அஹிம்சை வழி போராட்டத்தை தடுக்க முற்பட்டனர்.

ஆனாலும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தாய்மார் போதிய சமூக இடைவெளியை பேணி முகக்கவசம் அணிந்திருந்தனர்.

ஆனால், அதேவேளை நல்லூர் கோவில் வீதியில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாட்டில் கொரோனா பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல் ஊர்வலமொன்று நடத்தப்பட்டிருந்தது. அரச அமைச்சர் தயாசிறி ஜெயசேகர ,சிங்கள காடையர்கள், இராணுவ புலனாய்வாளர்கள் மற்றும் வாள் வெட்டு ஆவா குழுவினரென பலரும் அந்த ஊர்வலத்தில் பங்கெடுத்திருந்தனர்.

ஆனால் அவர்களை கொரோனா தாக்கதென்பதை இலங்கை காவல் துறையினர் கண்டறிந்துள்ளனர்.

அதனால் அவர்களது ஊர்வலத்தை நிறுத்துமாறு இலங்கை காவல்துறை கேட்கவில்லை.

அதேபோன்று வீரசிங்கம் மண்டபத்தில் கட்சி கூட்டம் மண்டபம் நிறைந்ததாக நடத்தப்பட்டுள்ளது.

அங்கும் கொரோனா வந்தடையாதென்பதை இலங்கை காவல்துறை கண்டறிந்துள்ளதாவென கேள்வி எழுப்பியுள்ளார் விந்தன் கனகரட்ணம்.

உண்மையில் இலங்கை ஜனநாயக நாடென இப்போதும் எவராயினும் சொல்வார்கள் ஆனால் அவர்களது மனநிலை பற்றி ஆராயவேண்டும்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையென தொடரும் அமைதிப் பேரணி மீது இன்று (நேற்று) தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர்கள் பயணிக்கின்ற வாகனங்கள் தொடர்ந்து பயணிக்காதிருக்க வீதிகளில் முட்கம்பிகள், ஆணிகள் போடப்படுகின்றன.

தமிழ் மக்களுக்கு பாதுகாப்பில்லாத நாடாக இலங்கை இருக்கின்றது. பேசுவதற்கு எழுதுவதற்கு எதற்குமே இலங்கையில் பாதுகாப்பில்லையெனவும் விந்தன் கனகரட்ணம் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாத்தளை மாவட்டத்தின் சில பகுதிகளில் தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளது!

மாத்தளை மாவட்டத்தின் சில பகுதிகளில் தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி பொசலேன் பிரதேசம் இசுறு மாவத்தை மற்றும் மக்கள் குடியிறுப்பு தொகுதி ஆகிய பகுதிகளில் தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட போன்து பிட்டிய 727 கிராமசேவையாளர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

உடன் அமுலாகும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் 4 கடைகளுக்குப் பூட்டு 32 பேர் சுயதனிமையில்!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்படும் வங்கிக் கட்டடத்துக்கு வளிச்சீராக்கி பொருத்துவதற்கு வருகை தந்த தென்னிலங்கையைச் சேர்ந்தவருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டது.

இந்நிலையில், யாழ்ப்பாணம் நகரில் நான்கு கடைகள் மூடப்பட்டுள்ளதுடன் 32 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்படும் வங்கிக் கட்டடத்துக்கு வளிச்சீராக்கி பொருத்துவதற்கு கடந்த மாதம் வருகை தந்த ஒருவருக்கு எழுதுமட்டுவாழ் வீதித் தடையில் வைத்து பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டன. அவருக்கு தொற்று உள்ளமை கடந்த புதன்கிழமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனடிப்படையில், சம்பந்தப்பட்டவரிடம் விசாரித்ததில், அவர் யாழ்ப்பாணம் நாக விகாரை விடுதியில் தங்கியிருந்தமை கண்டறியப்பட்டது.

அத்துடன், வங்கிக் கட்டட வேலைகள் நிறுத்தப்பட்டதுடன், தொழிலாளிகள் சிலர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், அவர் சென்றதாகத் தெரிவித்த நாக விகாரைக்கு அண்மையில் உள்ள மருந்தகம் மூடப்பட்டு அங்கு பணியாற்றுபவர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், அவர் சென்றிருந்த வேம்படிச் சந்தியில் உள்ள உணவகம், வைத்தியசாலை வீதியில் உள்ள ஐஸ் கிறீம் கடையுடன் கூடிய உணவகம் உள்ளிட்டவையும் மூடப்பட்டுள்ளன.

இவ்வாறு, மூடப்பட்ட நிறுவனங்களில் உள்ளவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தொற்று இல்லை என அறிக்கை கிடைத்தால் திறக்க அனுமதிக்கப்படுவார்கள் என சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## கருங்கல்லில் சிக்கி 4 வயது குழந்தை பலி!

பண்டாரவெல - ஹல்தும்முல்லை, ஹரங்கஹவ பிரதேசத்தில் 4 வயதுடைய குழந்தையொன்று கருங்கல்லொன்றில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது வெலிமடை உடபேருவ பிரதேசத்தைச்சேர்ந்த குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

தாய், தந்தையுடன் உறவினர் ஒருவரின் வீட்டுக்கு சென்றிருந்த போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

குழந்தை தந்தையுடன் கருங்கல் ஒன்றில் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்த போது அங்கு குரங்கொன்று வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, கல்லில் இருந்து அவர்கள் பாய்ந்துள்ள நிலையில், குறித்த கருங்கல் கவிழ்ந்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.02.2021 இல் வெளியிடப்பெற்றது.